REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK
2023 ஏப்ரல் 11 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 86
Tuesday 11, April, 2023
12பக்கங்கள்
50/-




# மலையக பல்கலைக்கழகத்தை அமைக்கும் பணிகள் விரைவில்

## ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் அதிகாரிகளுக்கு உத்தரவு

### இ.தொ.கா பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்றைய நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் ஜனாதிபதியிடம் சட்டிக்காட்டியதையடுத்து உடனடி நடவடிக்கை

மலையக பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (10) நடைபெற்றது.

இதன்போது மலையக பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் விடுத்த கோரிக்கையை ஏற்றே, ஜனாதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையால் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அடுத்தக்கட்ட நகர்வுகள் ஸ்தம்பித்தன. இந்நிலையில் இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேற்று ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

04



# ரயில், பஸ்களின் ரிக்கட் விரைவில் QR முறையில்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

ரயில் மற்றும் பஸ் பயணிகளுக்கான பயணச்சீட்டுக்கு பதிலாக QR குறியீடு அறிமுகப்படுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இந்த வருடம் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். புதிய தொழில்நுட்பம் உள்ளிட்ட QR அமைப்பின் ஊடாக பயணச்சீட்டை தானே பெற்றுக்கொள்ளும் முறைமை உருவாக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



# தமிழர் பிரச்சினை குறித்து பேசாத தமிழ் தலைவர்கள்

## சந்தேகப்படுகிறார் தமிழர் அமைப்பு பிரதிநிதி நிமலன்

மக்களின் வாக்குகளால் பாராளுமன்றத்துக்குச் சென்ற தமிழ் அரசியல் தலைவர்கள், மக்களைச் சார்ந்த எல்லா பிரச்சினைகளிலும் பங்குபற்ற வேண்டியது உயிருக்கும் மேலான கடமை என உலக வாழ் புலம்பெயர் தமிழர் அமைப்பின் பிரதிநிதி நிமலன் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ் அரசியல் தலைவர்கள் உண்மையில் தமிழ் சமுதாய பிரச்சினைகள் குறித்து பேசுகின்றார்களா என்ற கேள்விக்குப்

04



# SJB யின் MPக்கள் சிலர் அரசுடன் இணைவது உறுதி

## – நளின் பண்டார MP தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் புதுவருடத்தின் பின்னர் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின்பண்டார தெரிவித்துள்ளார். கட்சித்தாவல் இடம்பெறவுள்ளதை எங்களால் மறுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பக்கம் செல்வார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற

04

## நானுஓயாவிலிருந்து ராகலை வரை;

# நுவரெலியா ஊடான பிரித்தானிய ரயில் பாதைகள் புனரமைப்பு

## வெளிநாட்டு முதலீடுகளை நாடவுள்ள அமைச்சர் பந்துல



நானுஓயாவில் இருந்து நுவரெலியா ஊடாக ராகலை வரையான பிரித்தானிய கால ரயில் மார்க்கத்தை புனரமைக்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு வெளிநாட்டு முதலீடுகளை நாடவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

31 கிலோமீற்றர் நீளமுள்ள குறுகிய

04




# O/L பரீட்சை ஒத்திவைப்பு மே. 29 முதல் நடத்த திட்டம்

## பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சை ஒத்திவைக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது. அதன்படி, முன்னதாக எதிர்வரும் மே 15

04



# ஏப்ரல் 25 உள்ளூராட்சி தேர்தல்கள் இடம்பெறாது

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்படாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக மாகாண

04



# ஓமான் பிரஜையின் ஆடைத்தொழிற்சாலைக்கு STF பாதுகாப்பு




அண்மையில் தாக்குதலுக்குள்ளான ஓமான் பிரஜையொருவருக்கு சொந்தமான கட்டான, ஹல்பே கோபியாவத்தை பகுதியில் அமைந்துள்ள ஆடை தொழிற்சாலைக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் (STF) பாதுகாப்பு வழங்கியுள்ளனர். அதன் பிரகாரம் விசேட அதிரடிப்படையினரின் பூரண பாதுகாப்பில் பணிகள்

04



தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பிரதான நகரங்களில் மக்கள் நிறைந்து வழிவதோடு புத்தாடை மற்றும் புத்தாண்டுக்குத் தேவையான இதர பொருட்களை வாங்குவதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# ஐந்து நாட்களில் 265 விபத்துகளில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்



கடந்த ஐந்து நாட்களில் வாகன விபத்துக்களினால் 25 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் 265 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ்

04

# இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் உயர்வடைவு



## ஒரு டொலர் 327 ரூபாவாக விற்பனை

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் அதிகரித்துள்ளது. இலங்கை மத்திய வங்கி இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது. இதற்கமைய, நேற்றைய தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 311.63 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 327.72 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

04



ஜூன் 1 முதல் 14 பொருட்கள் மீது இறக்குமதி தடைவரும்
வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியானது
03



வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய
வழக்கு விசாரணை 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பு
03



சம்பளமில்லா விடுமுறைக்கு விண்ணப்பித்தோரில்
2000 அரசு ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் விடுமுறை
உள்ளூராட்சி அமைச்சு தெரிவிப்பு
03

# நலிந்த பிரிவினருக்கான ரூ.14,000 தோட்ட மக்களுக்கும் வேண்டும்

## ஜனாதிபதியிடம் மனோ MP நேரடியாக வேண்டுகோள்



உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் குறைந்த வருமானம் பெறும் நலிந்த பிரிவு குடும்பங்களுக்கு மாதாந்தம் 14,000 ரூபாவை இக்குடும்பங்களது வங்கி கணக்குகள் மூலம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. பொருளாதார சீர்திருத்தம் நிகழும் போது, மென்மேலும் நெருக்கடிக்கு உள்ளாகும் பிரிவினருக்கு இத்தகைய மாதாந்த நலன்புரி கொடுப்பனவு வழங்குவது சரியானது.

04

# போதைப்பொருள் பாவனை அதிகரிக்க இவர்களே காரணம்

## – அரசியல்வாதிகளை சாடுகிறார் சுமந்திரன் MP



இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரிக்க அரசியல்வாதிகளே காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார். யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

04

# வியாபாரிகள் எவராவது மக்களை ஏமாற்றுகின்றனரா?

## 24 மணிநேரமும் முறையிட தொலைபேசி இலக்கம்



முறைகேடான முறையில் ஈடுபடும் வர்த்தகர்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்கள் அறிவிப்பதற்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த எண் 24 மணி நேரமும் செயற்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி, தரமற்ற எடை மற்றும் அளவீட்டு

04






நீரில் மூழ்கி பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழப்பு
கண்டி, பொல்கொல்லவில் சம்பவம்
03



இரு குடும்பங்களுக்கிடையில் மூண்ட சண்டையில் ஒருவர் பலி
மன்னார், சாந்திபுரம் பகுதியில் சம்பவம்
03

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# அம்பாறை பிரதேச நிலைமைகளை நேரில் ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ்

**நிந்தவூர் குறூப், வாச்சிக்குடா விசேட, வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்**



அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், அட்டப்பள்ளம், தம்பிலுவில், காரைதீவு ஆகிய பிரதேசங்களுக்கு கடந்த சனிக்கிழமை (08) சென்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, அப்பிரதேசங்களிலுள்ள நிலைமைகளை ஆராய்ந்து, அவற்றுக்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் வை.எல். சுலைமா லெவ்வையின் அழைப்பையேற்று, நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசத்துக்குச் சென்ற அமைச்சர், அப்பிரதேசத்தில் கடலரிப்பைத் தடுப்பதற்கு தனது அமைச்சின் மூலம் மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன் நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசத்தில் கடலரிப்பினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் அமைச்சர் பார்வையிட்டார்.

மேலும் நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசக் கடலரிப்பைத் தடுப்பதற்காக நான்கு இடங்களில் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்படும் வேலைகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இதேவேளை, தம்பிலுவில் கனகரெட்ணம் கட்டடத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்.

இச்சந்திப்பில் அமைச்சர் கருத்துத் தெரிவித்த போது, "கடந்தகால சூனிய அரசியல், மக்களை கையேந்தும் நிலைக்கு கொண்டு சென்றதாகவும் அதிலிருந்து மக்களை மீட்டெடுத்து சுயமாக, கௌரவமாக வாழக்கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதே தனது நோக்கமென்றார்.

இச்சந்திப்பின் போது, அமைச்சரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன், பொதுவிடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டன.

இவ்வாறிருக்க, காரைதீவு பிரதேசத்துக்குச் சென்ற அமைச்சர், காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தை தரிசித்தார்.

இதனைத் தொடர்ந்து கடற்றொழிலாளர்களுடனும் அமைச்சர் கலந்துரையாடியதுடன், அவர்களுக்கான வீட்டுத்திட்டம், மீன்பிடி வலைகள் வழங்குதல் உள்ளிட்டவற்றில் காரைதீவு கடற்றொழிலாளர்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைதீவுப் பிரதேச அமைப்பாளர் த.தர்மேந்திராவுக்கு அறிவுறுத்தியுள்ளார். இந்நிலையில், அமைச்சரின் அறிவுறுத்தலுக்கு அமைய, காரைதீவு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கின் குரல்

# மீண்டும் அதே பெயரில் நடப்பட்ட புன்னைக்குடா வீதி பெயர்ப்பலகை




**மட்டக்களப்பு விசேட நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர், புன்னைக்குடா வீதிக்கு மீண்டும் அதே 'புன்னைக்குடா வீதி' எனப் பெயர் சூட்டப்பட்டு, பெயர்ப் பலகை நேற்று திங்கட்கிழமை (10) போடப்பட்டுள்ளது.

'ஏறாவூர் புன்னைக்குடா வீதி' என புழக்கத்திலிருந்து வந்த பெயரை மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியைத் தொடர்ந்து பலரும் அதிருப்தி வெளியிட்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் சுற்றாடல்துறை அமைச்சருமான நஸீர் அஹமட் எடுத்த முயற்சியினால் மீண்டும் அவ்வீதிக்கு 'புன்னைக்குடா வீதி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.



கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் சுற்றாடல்துறை அமைச்சருமான நஸீர் அஹமட்டின் ஏற்பாட்டில் ஏறாவூர் பிரதேசத்தில் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது.

# கந்தளாயில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் பலி; பஸ் சாரதி கைது

**ரொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதான வீதியில் சர்தாபுர பகுதியில் நேற்று திங்கட்கிழமை (10) காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிளும் இ.போ.ச. பஸ் வண்டியும் ஒன்றுடனொன்று மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளதுடன், மஞ்சள் கோட்டுக் கடவையை சைக்கிளில் சென்றவர் கடக்க முயன்ற வேளையில், திருகோணமலையிலிருந்து பயணித்த மேற்படி பஸ் மோதியதாக பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இதில் படுகாயமடைந்தவர், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், சைக்கிளில் சென்ற சர்தாபுரத்தின் ஆறாம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 36 வயதுடைய கே.ஏ.வசந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை, இந்த விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணையை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அட்டாளைச்சேனை பிரண்ட்ஸ் கழகத்தின் இப்தார் நிகழ்வு

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்**



அட்டாளைச்சேனை பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வும் அலுவலகத் திறப்பு விழாவும் அவ்விளையாட்டுக்கழகத்தின் தலைவர் பி.எம்.றிம்ஸான் தலைமையில் கடந்த சனிக்கிழமை (08) நடைபெற்றது.

இதன்போது, இந்த விளையாட்டுக்கழகத்துக்கு புதிதாக இணைந்த வீரருக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.இம்றுபாஸ்கான் சீருடை வழங்கிக் கௌரவித்தார்.

அத்துடன், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் விளையாட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச் செல்லும் விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்வத், பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் சிரேஷ்ட வீரர் எம்.அஸ்லம் மற்றும் செயளாலர் எம்.எம். றிஸ்வான் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டார்.

பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகம் அம்பாறை மாவட்டத்திலுள்ள கடினபந்து விளையாட்டுக்கழகங்களுள் முன்னணியில் திகழ்வதுடன், அம்பாறை மாவட்ட கடினபந்து சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்குகின்றது. அத்துடன், மென்பந்து விளையாட்டிலும் காலூன்றிக் காணப்படுகின்றது.


## விலைமனுக்களுக்கான அழைத்தல்

வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம்
மற்றும் விமான சேவைகள்
BID No.: 014/T/2023
மத்தள, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில்
CCTV முறைமையை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படவைத்தல்

மத்தள, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில் CCTV முறைமையை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக பதினைந்தாயிரம் ரூபாவை (15,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.04.12 ஆம் திகதியிலிருந்து 2023.05.09 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2023 மே 10 ஆம் திகதி புதன்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விலைனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் பதினைந்து இலட்சம் ரூபாவிற்கு (1,500,000 இ. ரூபா) நிகரான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264103/011-2264104 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம்
மற்றும் விமான சேவைகள்
BID No.: 013/T/2023
மத்தள, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில்
விமானசேவை தகவல் காட்சிப்படுத்தும் முறைமையை வழங்கல்

மத்தள, மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில் விமானசேவை தகவல் காட்சிப்படுத்தும் முறைமையை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமானசேவைகள் ஆகியவற்றின் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனுதாரரினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வமான கோரிக்கைக் கடிதத்துடன் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவண கட்டணமாக பத்தாயிரம் ரூபாவை (10,000 ரூபா) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து பெற்றுக் கொண்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.04.12ஆம் திகதியிலிருந்து 2023.05.09ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(லங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அதிகமாக விரும்பின், மேலேயுள்ள முகவரியில் நேரடியாகவே முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம்.

விலைமனுக்கள் 2023 மே 10ஆம் திகதி புதன்கிழமையன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாகவே கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். விமைனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் கோரும்போது பெறக்கூடிய வங்கி உத்தரவாதமொன்றின் பாங்கில் ஒன்பது இலட்சம் ரூபாவிற்கு (900,000 இ. ரூபா) நிகரான விலைமனுப்பிணையொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தகவலையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமானநிலைய சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவிலிருந்து 011-2264103/011-2264104 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவும் head.scm@airport.lk என்ற மின்னஞ்சலூடாகவும் அல்லது www.airport.lk என்ற எமது இணையதளத்தை பார்வையிடுவதன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (தனியார்)(ஸ்ரீலங்கா) விமான நிலையம் மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டநாயக்க.**

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஏப்ரல் 11 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் பங்குனி 28
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து அஞ்சத் தேவையில்லை

## மட்டக்களப்பில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து எவரும் எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைக்காரியாலயத்தை திறந்துவைத்த பின்னர் அங்கு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் முன்னெடுத்த போராட்டங்களை முடக்குவதற்கு அன்று கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை விட இச்சட்டம் குறித்து கவலையடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு சட்டங்கள் அவசியமாகும் என்றும் இதனை அமெரிக்கா உட்பட பல நாடுகள் கைகொண்டுள்ளன என்றும் அமைச்சர் கூறினார். ஆகவே நாட்டின் சட்டதிட்டங்களை மதித்து நடந்தால் இவ்வாறான சட்டங்கள் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சர்வதேச குத்ஸ் தினம் நாளை அனுஷ்டிப்பு

### கொழும்பில் சிறப்புரைகள்

ஈரான் கலாசார நிலையம் ஏற்பாடு செய்துள்ள சர்வதேச குத்ஸ் தினம் (12) புதன்கிழமை மாலை மூன்று மணிக்கு இடம்பெறவுள்ளது. கொழும்பு 07, லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் ஹாஷிம்அஸ் ஜெஷாடாஹ், விஜித் மொரகஸ்வெவ தேரர், பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் உள்ளிட்ட பலர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

### சம்பளமில்லா விடுமுறைக்கு விண்ணப்பித்தோரில்

## 2000 அரசு ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் விடுமுறை

### உள்ளூராட்சி அமைச்சு தெரிவிப்பு

ஐந்தாண்டு காலம் ஊதியம் இல்லாது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைக்காக சமர்ப்பிக்கப்பட்ட முப்பதாயிரம் விண்ணப்பங்களில் இதுவரை 2000 விண்ணப்பங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கடந்த வருடம் (2022) ஜூன் மாதம் 22 ஆம் திகதி அரச ஊழியர்களுக்கு 05 வருட காலத்திற்கு வெளிநாடு

04

## இரு குடும்பங்களுக்கிடையில் மூண்ட சண்டையில் ஒருவர் பலி

### மன்னார், சாந்திபுரம் பகுதியில் சம்பவம்



மன்னார் சாந்திபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (09) இரவு இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றை தொடர்ந்து இடம்பெற்ற கொடூரமானத் தாக்குதலில் எமில் நகர் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் ஐவர் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும்

04

## ஜூன் 1 முதல் 14 பொருட்கள் மீது இறக்குமதி தடை

### வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியானது



சில பிளாஸ்டிக் பொருட்களின் இறக்குமதியை தடை செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று (10) வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரச அச்சக திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பணவியல், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சு இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை அச்சக திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர்

04

## நீரில் மூழ்கி பாடசாலை மாணவன் உயிரிழப்பு

### கண்டி, பொல்கொல்லயில் சம்பவம்

கண்டி, பொல்கொல்ல அணைக்கட்டுக்கு அருகில் நீராடச் சென்ற இரு பாடசாலை மாணவர்கள் நேற்று மாலை நீரில் மூழ்கியதில் ஒரு மாணவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களில் ஒருவர் உயிர் பிழைத்து தற்போது கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்

கண்டி நித்தவளை பிரதேசத்தில் வசிக்கும் கட்டுகஸ்தோட்டை ஸாஹிரா வித்தியாலயத்தில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் 17 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய

## வழக்கு விசாரணை 24 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

*வவுனியா விசேட நிருபர்*

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய உடைப்பு தொடர்பான வழக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் பொலிசார் தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணைகள் நேற்று (10) வவுனியா நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது பொலிசார் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான விசாரணை அறிக்கையினை மன்றில் சமர்ப்பித்ததுடன், இது

04

## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - திருகோணமலை
### 2023 ஆம் வருடத்திற்குத் தேவையான வழங்கல்கள்/ சேவைகள் (அழுக்குத் துணிகள் சலவை)

01. திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட ஆதார வைத்தியசாலைகளுக்கு பின்வரும் வழங்கல்கள், சேவைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
**அழுக்குத் துணிகள் சலவை செய்தல்**
02. **2023 மே 01 முதல் 2024 ஏப்ரல் 30** வரையான காலப்பகுதிக்கான இவ்வழங்கல், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரை இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் **11.04.2023ந் திகதி மு.ப 9.00 இலிருந்து 24.04.2023ம் திகதி பி.ப.3.00 மணி வரையும்** பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு / தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் சேவைக்கான ஒரு ஆவணத்தொகுதி மட்டுமே வழங்கப்படும்.
03. அரசாங்க ஒப்பந்தத்தை செய்ய முடியாதவாறு தடைசெய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
04. விண்ணப்பிக்க தகுதியானோர் கீழ் குறிப்பிடப்படும் தொகையினை, **இல.120. நீதிமன்ற வீதி, திருகோணமலை** எனும் முகவரியில் அமைந்துள்ள திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் **25.04.2023ந் திகதி மு.ப 10.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
05. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

**அ) அழுக்குத் துணிகள் சலவை செய்தல் :**

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| 1. ஆதார வைத்தியசாலை - கிண்ணியா | 1,000.00 | 5,000.00 |
| 2. ஆதார வைத்தியசாலை - மூதூர் | 1,000.00 | 5,000.00 |
| 3. ஆதார வைத்தியசாலை - புல்மோட்டை | 1,000.00 | 5,000.00 |

**ஆ) ஆவணங்கள்:**

1. தனிப்பட்ட கம்பனிகளாயின் வியாபார சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பத்திரப் பிரதி சமர்ப்பித்தல் வேண்டும் (Business Registration Certificate). சங்கங்களாயின் உரிய பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சிபாரிசுக் கடிதத்தினையும் ஏனையோர் தேசிய அடையாள அட்டையின் பிரதியினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும் போது சமுகமளிக்கலாம். கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
07. கேள்வி தொடர்பாக கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதுடன் இக் கேள்விச் செயன்முறையினை அனுமதிப்பது அல்லது இரத்துச் செய்வது தொடர்பான முழு அதிகாரமும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கே உண்டு.
08. மேலதிக விபரங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக் கணக்காளர் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.
**(தொலைபேசி - 026-2220103)**

**தலைவர்**
**திணைக்களப் பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை**
**120, நீதிமன்ற வீதி, திருகோணமலை.**

## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட வைத்தியசாலை - மாத்தளை

### Centrifuge இயந்திரமொன்று மற்றும் ஆய்வுகூட குளிரூட்டி ஒன்றைக் கொள்வனவு செய்தல்

மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் ஆய்வுகூடத்திற்கு Centrifuge இயந்திரமொன்று மற்றும் ஆய்வுகூட குளிரூட்டி ஒன்றை கொள்வனவு செய்து கொள்வதற்காக தகைமையுள்ள முகவர் நிறுவனங்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் 2023.05.03 அன்று மு.ப.10.30 வரை கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உருப்படி | தேவையான எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | Centrifuge Machine | 01 | DGH/ACC/3/9/ Laboratory/Centrifuge | 2,000.00 |
| 02 | Laboratory Refrigerator | 01 | DGH/ACC/3/9/ Laboratory/ Refrigerator | 2,000.00 |

02. 2023.04.17 முதல் 2023.05.02 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 - பி.ப.2.00 இற்கிடைப்பட்ட காலத்தில் மற்றும் 2023.05.03 அன்று மு.ப.10.00 வரை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் இதற்கான கேள்விப்படிவத்தொகுதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள், மற்றும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. முத்திரையிடப்பட்டு இரண்டு பிரதிகளில் (02) தயாரிக்கப்பட்ட கேள்விகள், 2023.05.03 அன்று மு.ப.10.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். கேள்விகளை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் “Quotation for LAB Centrifuge/LAB Refrigerator” எனக் குறிப்பிடல் வேண்டும்.
04. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அதாவது, 2023.05.03 அன்று மு.ப.10.30 இற்கு வைத்தியசாலையின் அலுவலகத்தில் அவை திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.
06. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரங்களில் இலவசமாக பரிசீலனை செய்து கொள்ளலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்திய பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தளை**
**2023.04.11**

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
குலுக்கல் திகதி 2023.04.09
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5085
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,160,947.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 0 9 5 5 2 5

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1540
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,980,688.80
வெற்றி இலக்கங்கள் 9 4 4 7 9 7

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1115
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,657,985.20
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 08 20 48 72

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3327
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,638,835.44
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 12 19 33 48

ராசி சப பலம்
சீட்டிழுப்பு இலக்கம் 394
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,977,215.00
வெற்றி இலக்கங்கள் 09 15 21 47

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1433
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 313,948,634.00
ஆங்கில எழுத்து V 13
வெற்றி இலக்கங்கள் 05 15 74 76
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்

வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபை (மேல் மாகாணம்)

## கடை அறைகளை குத்தகைக்கு வழங்குதல்

மேல் மாகாண வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபைக்குரித்தான பின்வரும் பிரதான பஸ் நிலையங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடை அறைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| பஸ் நிலையம் | கடை அறை இலக்கம் | குத்தகைக் காலம் (வருடங்கள்) | சதுர அடி பரப்பளவு | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|
| அங்கொட | 01 | 10 | 240 | 32,000.00 | 384,000.00 |
| ருக்மல்கம | 01 | 10 | 40 | 8,000.00 | 96,000.00 |

ஒரு கடை அறையின் பொருட்டு விண்ணப்பக் கட்டணமாக 2,000.00 ரூபா மற்றும் மீளளிக்கப்படும் 5,000.00 ரூபா கேள்வி வைப்பை ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் கேள்விப் படிவங்களை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களை இலவசமாக 2023-05-10ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2023-05-11ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன் 2023-05-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும்.

கேள்விப் படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து பிரதான அலுவலகத்தின் தரைத் தளத்தின் நிர்வாகப் பிரிவில் பிரதிப் பொது முகாமையாளரின் (நிர்வாகம்) உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். மேலும் கேள்வியைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘………….. இலக்க கடை அறையை குத்தகைக்கு வழங்குதல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு: பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) - 011-2871355**

- **கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் - 2023-05-11 பி.ப. 2.00 மணிக்கு**

தலைவர்,
சிறு பெறுகைக் குழு,
வீதிப் பயண போக்குவரத்து அதிகார சபை (மே.மா),
இல. 89, ரத்மகயாய,
கடுவளை வீதி, பத்தரமுல்ல.
2023-04-11

SLITA
இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம்
(கைத்தொழில் அமைச்சு)

## ஆலோசனையாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக பிரேரணைகளைக் கோரல் (RFP)

இல. SLITA/IN/01/2023

வகுப்பறைகளின் (பிரிவு B) உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்காக வடிவமைப்பு மற்றும் நிர்மாண மேற்பார்வைக்காக கூட்டுச் சங்கங்களின் உசாத்துணைச் சேவைகள்

1. இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவானது மேற்படி உசாத்துணைச் சேவைகளிற்காக பிரேரணைகளைக் கோருகின்றது. இச் சேவைகளின் மேலதிக விபரங்கள் முன்மொழிவுகளுக்கான கோரிக்கையின் நியதிக் குறிப்புக்களில் வழங்கப்பட்டுள்ளன.
2. A Consultancy Organization will be selected under Quality Based Selection (QBS)/ method and procedures described in RFP in accordance with the policies described in the latest version of the following Guidelines: Selection and Employment of Consultants, published by National Procurement Agency: 2007

இந்த முன்மொழிவுகளுக்கான கோரிக்கையானது பின்வரும் ஆவணங்களை அடக்குகின்றது.

பகுதி 1 - அழைப்புக்கடிதம்
பகுதி 2 - உசாத்துணையாளர்களுக்காக பணிப்புரைகள் (தரவு தாள் அடங்கலானது)
பகுதி 3 - தொழில் நுட்ப முன்மொழிவுகள் நியமமாக்கப்பட்ட படிவங்கள்
பகுதி 4 - நிதியிடல் முன் மொழிவு நியமமாகக்ப்பட்ட படிவங்கள்
பகுதி 5 - நியதிக் குறிப்புக்கள்
பகுதி 6 - ஒப்பந்தத்தின் நியமமாக்கப்பட்ட படிவம்

3. உசாத்துணையாளர்கள் மேலதிக விபரங்களை இலங்கை பிடவை மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் (நிருவாகம்) இடம் பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.30 வரை வார வேலை நாட்களில் 17 ஏப்ரல் முதல் 02 மே 2023 (விடுமுறை தினங்கள் தவிர்ந்த) வரை பெற்றுக் கொள்ளலாம்.
4. தேசிய பெறுகை முகவராண்மையினால் தேசிய போட்டி ரீதியிலான பெறுகை முறைமையின் கீழ் முன்மொழிவுகளுக்கான மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
5. உசாத்துணையாளர்கள் எமது இணையத் தளமான www.slta.lk இல் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விப் படிவத்தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம். (வன் பிரதிகள் வழங்கப்படமாட்டாது)
6. முன் மொழிவுகள் 2023 மே 02 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் பிரரேணைகள் நிராகரிக்கப்படும்.

2023 மே 02 அன்று பி.ப. 2.00 இற்கு பின்வரும் முகவரியில் சமுகமளித்திருக்கும் உசாத்துணையாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் பிரேரணைகள் திறக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம்,**
**கந்தவல எஸ்டேட், இல. 02, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல வீதி,**
**இரத்மலானை.**
**தொலைபேசி: 011 2632406**
**தொலைநகல்: 011 2612087**
**மின்னஞ்சல்: dg@slita.lk**
**இணையம்: www.slita.lk**




# நன்மைகளை பாதுகாத்துக்கொள்வோம்

நாம் ரமழானிலும் ரமழான் அல்லாத ஏனைய காலங்களிலும் அதிகமான நன்மைகளை செய்கின்றோம். கடமையான தொழுகைகள், சுன்னத்தான தொழுகைகளான தஹஜ்ஜத், வித்ர், ழுஹா போன்றவைகளிலும் காலை மாலை வேளைகளில் அதிகமதிகம் திக்ர்களிலும் ஈடுபடுகின்றோம். அல்குர்ஆனை அதிகமாக ஓதுகின்றோம். பல இலட்சங்களைச் செலவு செய்து உம்ரா செய்கின்றோம். இவற்றின் மூலமாக நிறைய நன்மைகளை சேர்த்துக் கொள்ள முடியும்.

என்றாலும் இவ்வாறு சேர்த்துக் கொள்ளும் நன்மைகளை இழந்துவிடாது பாதுகாத்துக்கொள்வது மிகவும் முக்கியமானது. ஏனெனில் அல்லாஹ்வோடு தொடர்பான ஹுகூகுல்லாஹ் விடயங்களில் நாம் ஈடுபடும்போது அதிகமான நன்மைகளை சேர்த்துக்கொள்ள முடியும். ஆனால் மனிதனுடன் தொடர்பான ஹுகூகுல் இபாத் தொடர்பில் நாம் தவறு விடும்போது பல நன்மைகளை இழக்க வேண்டி வரலாம்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் 'வங்குரோத்து நிலையை அடைந்தவன் பற்றி உங்களுக்கு தெரியுமா'? என்று கேட்டார்கள். அதற்கு தோழர்கள் 'யாரிடம் பணமும் பொருட்களும் இல்லையோ அவன்தான்' என்று குறிப்பிட்டார்கள். அதற்கு நபியவர்கள் 'எனது சமூகத்தில் வங்குரோத்து நிலையை அடைந்தவர் யாரென்றால்... மறுமை நாளில் சில மனிதர்கள் தொழுகை, நோன்பு, ஸகாத்துடன் வருவார்கள். ஆனால் அவர்கள் சிலருக்கு ஏசியிருப்பார்கள், சிலரைப்பற்றி அவதூறு சொல்லியிருப்பார்கள், சிலரின் சொத்துக்களை அபகரித்திருப்பார்கள், சிலருடைய இரத்தத்தை ஓட்டியிருப்பார்கள், சிலருக்கு அடித்திருப்பார்கள். அதனால் அவரது நன்மைகளில் இருந்து இத்தகையவர்களுக்கு வழங்கப்படும். அவரது நன்மைகள் முடிவடைந்து விட்டால் பாதிக்கப்பட்டவர்களின் பாவங்கள் அவருக்கு வழங்கப்படும். பின்னர் அவர் நரகில் எறியப்படுவார் (ஆதாரம் முஸ்லிம்) என்று குறிப்பிட்டார்கள்.

ஆகவே தேடிப்பெற்றுக்கொள்ளும் நன்மைகளை மறுமைவரை பாதுகாத்துக்கொள்வோம்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

## இலங்கையில் நடைபெற்ற இலங்கை - இந்திய கூட்டு கடற்படை பயிற்சியும் மாநாடும்

### இருநாட்டு கப்பல்கள் விமானங்கள் பங்கேற்பு

இலங்கை இந்தியக் கடற்படைகளுக்கு இடையிலான மாநாடும் பயிற்சிகளும் கடந்த மூன்றாம் திகதி முதல் எட்டாம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது.

இருநாட்டு கடற்படையினர் மத்தியில புரிந்துணர்வையும், நட்பையும் அதே சமயம் கடலில் இணைந்தும் பணியாற்றவும் உதவும் வகையில் இப்பயிற்சி அமைத்திருந்தது என்று கொழும்பு இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

முதல் கட்டம் கொழும்பு துறைமுக வளாகத்திலும் இரண்டாவது கட்டம் கடலிலும் நடைபெற்றன.

இப்பயிற்சியில் இலங்கை, இந்திய கடற்படைக் கப்பல்களும் விமானங்களும் பங்கேற்றிருந்தன. இந்தியக் கப்பலில் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அளித்த விருந்துபசாரத்தில் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பரஸ்பர நல்லுறவும் நெருங்கிய வர்த்தக உறவும் நீண்டகாலமாக நிலவி வருவதால், அதன் ஒரு பகுதியாக இருநாட்டு கடற்படையும் கடல் ஒத்திகையில் ஈடுபட்டு வருவதாகவும், தமக்கிடையே நல் வழக்கங்கள், நடைமுறைகள், பல்தரப்பட்ட கடல்சார் நடவடிக்கைகளை பரிமாறிக் கொள்ள இப்பயிற்சிகள் உதவுவதாகவும் இந்தியத் தூதரகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





இலங்கை குமரி திமிழ் பணி மன்றம் அனைத்துலக தாய்மொழி நாள் நிகழ்வாக கிலி. கூட்டுறவு மண்டபத்தில் 200 ஆண்டு அகவையை பூர்த்தி செய்த நாவலர் பெருமான், மருத்துவர் சாமுவேல் பிச் க்ரீன்,நா.வைகுகராசா, இரா. இளங்குமரனார் ஆகியோரின் நினைவேந்தலும் மன்றத்தின் பத்தாண்டு நிறைவு மலர் வெளியீடும் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள். படம்: இக்பால் அலி

## இலங்கை ரூபாவின்...

இதேவேளை, ஏனைய நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று உயர்வடைந்து காணப்பட்டது.

## ஐந்து நாட்களில் 265...

ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வாகன சாரதிகள், குறிப்பாக இளைய சாரதிகள் வாகனத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## O/L பரீட்சை...

ஆம் திகதி சாதாரண தரப் பரீட்சையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தற்போது குறித்த பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சாதாரண தரப்பரீட்சை எதிர்வரும் மே 29ஆம் திகதி முதல் ஜூன் 8 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## SJB யின் MPக்கள்....

உறுப்பினர் ராஜிதசேனாரட்ண எப்போதும் கட்சிதாவும் நோக்கத்துடனேயே உள்ளார். அமைச்சு பொறுப்பை ஏற்பது குறித்தும் ஆர்வமாக உள்ளார் என நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ராஜித எப்போதும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் காணப்படுகின்றார். மேலும் கட்சி தாவுவது அவருக்கு பெரிய விடயமல்ல எனவும் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

## நலிந்த பிரிவினருக்கான...

இது தொடர்பில் அரசையும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இலங்கையின் அபிவிருத்தி பங்காளர்களையும் பாராட்டுகிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, இந்த நலன்புரி கொடுப்பனவு இலங்கையின் மிகவும் நாளாந்த பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். பதுளை, கண்டி, நுவரேலியா, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பின் அவிசாவளை, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் பெருந்தோட்ட குடும்பங்களை வழமைபோல் ஒதுக்கி விடுவதை நாம் இம்முறை ஏற்க போவதில்லை. நாளாந்த சம்பளம் ரூ. 1,000/+ ஆகவே மாதம் ரூ.25,000/+ என காகிதத்தில் கணக்கு எழுதி இம்மக்களை தவிர்க்க கூடாது. அதேபோல், பெருந்தோட்ட பிரதேசத்தில் தோட்டங்களில் வேலை செய்யாதோரும் வாழ்கிறார்கள். அவர்களும் குறைந்த வருமானம் பெரும் நலிந்த பிரிவினரே. அவர்களுக்கும் இந்த மாதாந்த நலன்புரி கொடுப்பனவு கிடைக்க வேண்டும். மாதாந்த மின்சார கட்டண பட்டியலில் 1 முதல் 90 வரை அலகுகளை பயன்படுத்துகின்ற குடும்பங்கள், குறைந்த வருமானம் பெரும் நலிந்த பிரிவினராக கருதபடலாம். அப்படியானால் அரசியல் தலையீடு இல்லாமல் நியாயமான ஏழை குடும்பங்களுக்கு நலன்புரி கொடுப்பனவு கிடைக்க வழி ஏற்படும். இது எனது ஆலோசனை.

இக்கருத்துகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி அவரிடம் நேரடியாகவும் கூறியுள்ளார்.

## மலையக பல்கலைக்கழகத்தை...

இதன்படி விரைவில் பணி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஷ்வரன், வீ. இராதாகிருஷ்ணன், எஸ்.பி. திஸாநாயக்க, சீ.பீ ரத்னாயக்க ஆகியோரும், ஜனாதிபதி செயலாளர், மாகாண ஆளுநர், அரச அதிபர், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் இந்நிகழ்வில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. தற்போது ஸ்தம்பித நிலையில் உள்ள அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பது பற்றியும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், நுவரெலியா மாவட்ட சுற்றுலா அபிவிருத்தி, வசந்தகால பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

## போதைப்பொருள்...

அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் இதனை தடுத்து நிறுத்தாமையால் சிறுவர்களும் இளைஞர்களும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் விநியோகத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை முழுமையாக கைது செய்யப்படவில்லை என்றும் இதில் ஆட்சியாளர்களின் தலையீடு காணப்படுவதாகவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் விநியோகத்தை தடுப்பது மிகவும் கடினமான விடயமாக இருப்பதனால், போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நுவரெலியா ஊடான...

ரயில் மார்க்கம் ஆங்கிலேயர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது. இருப்பினும், இது வணிக ரீதியாக நம்பகத்தன்மை இல்லாததால், பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அகற்றப்பட்டது.

BOT (கட்டமைத்தல், இயக்குதல், இடமாற்றம்) மாதிரியின் கீழ் இந்த ரயில் மார்க்கத்தை புனரமைக்க வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் இருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு அரசாங்கம் அழைப்பு விடுக்கும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். உலகின் ஆறாவது மிக உயரமான ரயில் நிலையமான கந்தபொல இந்த ரயில் மார்க்கத்தில் அமைந்துள்ளது என்றார். இதன் ஊடாக சுற்றுலா வளர்ச்சிக்கு நிறைய வாய்ப்புகள் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர் பிரச்சினை...

பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், யுத்தம் நிறைவுற்ற 11 வருடங்கள். இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களுக்காக என்ன சாதித்துள்ளனர். அரசியல் கைதிகளின் விடுதலை, திட்டமிட்ட இனப்படுகொலை பிரச்சினை மற்றும் சர்வதேச நீதிகள் பொறிமுறை இது சம்பந்தமான தமிழ் அரசியல் தலைவர்கள் கதைத்திருக்கின்றார்களா?

ஐக்கிய நாடுகள், ஜெனிவா குறித்துப் பேசுகின்றீர்கள். இவர்கள் யாராவது தங்களுடைய ஆதிக்கத்தையோ பிரச்சினைகளையோ, காணாமல் ஆக்கப்பட்டவர்களைப் பற்றியோ பேசுகின்றார்களா.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நடத்தும் எந்த ஒரு போராட்டத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் கலந்து கொள்கின்றார்களா, இல்லை. மக்களின் வாக்குகளால் பாராளுமன்றத்துக்கு தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள். மக்களைச் சார்ந்த எல்லா பிரச்சினைகளிலும் பங்குபற்றவேண்டியது உயிருக்கும் மேலான கடமை எனத் தெரிவித்துள்ளார்.

## ஏப்ரல் 25...

சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பை தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர, தற்போதைய நிலவரப்படி இம்மாதம் 25ஆம் திகதி தேர்தல் நடத்தப்படாது என்றார். திட்டமிட்டபடி தபால் மூல வாக்களிப்பு நடைபெறாததாலும், ஏனைய தேவைகள் காரணமாகவும் ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல், தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஆஜராகாதமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதாகவும் அவர் குறிப்பிட்டார்.எதிர்காலத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் திறைசேரி அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்படும் என்றார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வியாபாரிகள்...

உபகரணங்களைப் பயன்படுத்தும் வர்த்தகர்கள் தொடர்பான முறைப்பாடுகளை 011 218 22 53 ஊடாக பொதுமக்கள் தெரிவிக்க முடியும்.

## 2000 அரசு ஊழியர்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

செல்வதற்கான சுற்றறிக்கையை வெளியிட்டது.

அதன்படி, கடந்த 1ஆம் திகதி வரை உள்நாட்டு விடுமுறைக்கான 150 விண்ணப்பங்களும், வெளிநாட்டு விடுமுறைக்கான 1000 விண்ணப்பங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 6 மாதங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மாத்திரம் அனுமதி கிடைத்துள்ளதாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடியுடன் எதிர்காலத்தில் இந்தத் தொகை அதிகரிக்கலாம் எனவும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் .

பல அரச ஊழியர்கள் கொரியாவுக்குச் செல்வதற்காக வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்றனர். பெரும்பாலான விண்ணப்பங்கள் மொழிப் பிரச்சினை காரணமாக நிராகரிக்கப்படுகின்றன. எனினும், மொழியைக் கற்றுக்கொண்ட பிறகு மீண்டும் விண்ணப்பிப்பார்கள். அதற்கு குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். அதன்படி, வெளிநாட்டு விடுவிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## இரு குடும்பங்களுக்கிடையில்... 03ஆம் பக்கத் தொடர்

தெரிய வருகையில்,

நீண்டகாலமாக சாந்திபுரம் பகுதியில் இரு குடும்பத்திற்கு இடையில் நிலவி வந்த பிரச்சினை பொலிஸ் நிலையம் வரை சென்று சமாதனப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை (9) இரவு குறித்த இரு குடும்பத்திற்கு இடையில் மீண்டும் பிரச்சினை இடம் பெற்ற நிலையில் முரண்பாடு முற்றியுள்ளது.

இந்நிலையில் பலர் இணைந்து கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்திய நிலையில் எமில் நகர் பகுதியைச் சேர்ந்த 34 வயதான சத்தியா என்ற நபர் மரணமடைந்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவர் உட்பட ஐவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், கொலைத் தொடர்பில் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜுன் 1 முதல் 14... 03ஆம் பக்கத் தொடர்

ஜூன் 1 ஆம் திகதி முதல் பிளாஸ்டிக் தொடர்பான பொருட்களின் இறக்குமதிக்கான தடை அமுலுக்கு வரும்.அதன்படி, பிளாஸ்டிக் குழாய்கள் மற்றும் துணைக்கருவிகள், பிளாஸ்டிக் மேஜைப் பாத்திரங்கள், சமையலறை பாத்திரங்கள், பிளாஸ்டிக் சுகாதார கழிவறை பொருத்துதல்கள் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், யோகட் கோப்பை தவிர, ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தப்படும் கோப்பைகள், பிளாஸ்டிக் கரண்டி, முட்கரண்டி, கத்தி, பிளாஸ்டிக் இடியப்ப தட்டு, செயற்கை பூக்கள், இலைகள் மற்றும் பழங்கள் ஆகியவை தடை செய்யப்பட உள்ளன.

## வழக்கு விசாரணை... 03ஆம் பக்கத் தொடர்

தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மன்றுக்கு தெரியப்படுத்தினர்.

குறித்த கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்திய மன்று, குறித்த வழக்கை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்ததுடன், இது தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் மன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

## ஓமான் பிரஜையின்....

நடைபெறுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கீழ் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த மார்ச் 30ஆம் திகதி ஆடைத் தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் பாதுகாவலரை சில குழுவினர் தாக்கி அதன் உடைமைகளை சேதப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை என உரிமையாளர் ஓமான் தூதுவர் ஊடாக இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

தனக்கு நீதி கிடைக்காவிட்டால் நாட்டை விட்டு வெளியேறுவதாக ஓமான் பிரஜையான ஆடை தொழிற்சாலை உரிமையாளர் தெரிவித்திருந்தார். இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு நெருக்கமான குழுவினர் இந்த தாக்குதலை மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Market revived on low turnover despite investors being in holiday mood...

**Daily Market Watch**
06th April 2023

### Market Commentary

With many stock market participants on holiday, the turnover remained low at LKR 811.9 Mn with popular stocks such as LIOC up 2.24%, Expo Lanka 1.39%, Royal Ceramics up 2.48% and Vallibel One up 5.07%. Sri Lanka Telecom was up 9.59% during the day without any new announcements from the company.
The Central Bank has stated that a faster deceleration of inflation is expected from April 2023 with the reduction in domestic prices of essentials following the greater pass through of the moderation of global commodity prices and the recent appreciation of the Sri Lanka rupee, and the large disinflationary impact arising from the base effect.
Meanwhile, the sale of state owned enterprises is attracting large fund managers worldwide and we expect some of them to also invest in the stock market.

### Top Gainers and Loosers




### Market Performance

| | 06.04.2023 | 04.04.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,256.9 | 9,174.0 | 0.90 |
| S&P SL 20 Index | 2,685.9 | 2,664.3 | 0.81 |
| Turnover (LKR mn) | 811.9 | 768.3 | 5.7 |
| Foreign Purchases (LKR mn) | 104.2 | 87.1 | 19.7 |
| Foreign Sales (LKR mn) | 37.2 | 92.3 | -59.7 |
| Market Cap (LKR bn) | 3,911.7 | 3,869.7 | 1.1 |
| Market Cap (US$ bn) | 12.2 | 12.0 | 1.1 |
| Traded Companies | 232 | 239 | -2.9 |
| Market PER (x) | 5.0 | 5.0 | 1.0 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 1.1 |
| Dividend Yield (%) | 4.0 | 4.1 | -1.2 |

### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI




### Turnover Breakdown




### Key Rates

| | 06.04.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) - As at 31.03.202: | 21.40% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.80% |
| Treasury Bill Rate (364 Days) | 22.37% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.30% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

First Capital Holdings PLC (CFVF) - LKR 2.25. XD date – 19.04.2023.

Ceylinco Insurance PLC (CINS) - LKR 45.00. XD date – 29.05.2023.

First Capital Treasuries PLC (FCT) - LKR 1.50. XD date – 17.04.2023.Ceylon Tobacco

Company PLC (CTC) - LKR 20.30. XD date – 29.05.2023.

United Motors Lanka PLC (UML) - LKR 1.00. XD date – 02.05.2023.

Overseas Realty (Ceylon) PLC (OSEA) - LKR 1.25. XD date – 27.04.2023.

Nestle Lanka PLC (NEST) - LKR 75 .00. XD date – 06.06.2023

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# இறை இரக்கப் பெருவிழா



கத்தோலிக்கத் திருச்சபை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறை இரக்கப் பெரு விழாவை கொண்டாடுகிறது.

இந்தப் பெருவிழா வருடாவருடம் ஆண்டவரின் உயிர்த்த ஞாயிறு பெரு விழாவுக்கு அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடப்படுகிறது.

உலக ஆரம்பத்திலிருந்தே இறைவன் தம் மக்கள் மீது தாம் கொண்டுள்ள இரக்கத்தை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெளிப்படுத்தி வந்துள்ளார்.

பழைய ஏற்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகள் மூலமும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துநாதர் மூலமும் இறைவனின் இரக்கம் வெளிப்படுகின்றது.

ஆண்டவரை அன்புசெய்கிறவர்களுக்கு அவரது இரக்கம் தலைமுறை தலைமுறையாய் உள்ளது. என்று தேவதாய் தனது கீதத்தில் கூறுகிறார்.

பல்வேறு காலத்திலும் பாவிகளுக்குத் தமது நித்திய அன்பின் புதுத் தன்மைகளை அறிவித்து இறைஇரக்கத்தின் பக்தியை ஏற்படுத்த ஆண்டவர் பல அடியார்களுக்கு காட்சி தந்துள்ளார்.

இந்த பாக்கியத்தைப் பெற்றவர்கள் வரிசையில் சகோதரி தெரேசாள், சகோதரி பெனினா கோண்சொலாட்டா, சகோதரி சோபிய மெண்டஸ், சகோதரி மரிய பவுஸ்தீனா கோவல்ஸ்கா (சகோதரி பெத்ரோன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இறை இரக்கத்தின் பக்தியைப் பரப்பும் பணி சகோதரி பவுஸ்தீனாவிடம் விஷேடசமாக கைளிக்கப்பட்டது.

இவமரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா 1905 ஆம் வருடம் ஆகஸ்டு 25 ஆம் நாள் போலந்து நாட்டில் லோட்ஸ் என்னுமிடத்தில் பிறந்தார்.

அவர் கன்னியர் மடத்தில் சேர விரும்பியும் பெற்றோர் மும்முறை அனுமதி மறுத்துவிட்டனர்.

இறுதியாக தனது 20வது வயதில் தேவதாயின் இரக்கத்தின் சகோதரிகள் சபையில் சேர்ந்தார். வார்சாவில் தவசன்னியாசத்தை முடித்து 1928ல் முதல் வார்த்தைப்பாடும் கொடுத்தார்கள்.

இரக்கத்தின் அரசரான இயேசு இவருக்குப் பலமுறை காட்சி தந்துள்ளார். இக்காட்சிகள் 1930லிருந்து 1938 வரை நீடித்தன.

இறை இரக்கத்தின் பக்தியைக் குறித்து இயேசு அவருக்கு பல அறிவுரைகள் கூறியுள்ளார்.

தமது வார்த்தைகளை பவுஸ்தீனா கையேட்டில் எழுதிக்கொள்ளுமாறு பணித்தார். அவர்களது 600 பக்கங்களை கொண்ட நாட்குறிப்பிலிருந்தே இக்காட்சிகள் பற்றிய பல தகவல்களை அறியக்கூடியதாய்இருக்கிறது.

ஏனெனில் தமது ஆன்ம குருவையும் மடத்தலைவியையும் தவிர வேறொருவருக்கும் அவர் காட்சிகள் பற்றிய செய்தியை அறிவிக்கவில்லை. இந்த நாள் குறிப்புகள் ஆங்கில, இத்தாலிய, ஜெர்மன், இஸ்பானிய, பிரஞ்சு, அரேபிய, ரஷ்ய, ருமேனிய, செக், ஸ்லோவாக்கிய, மலையாளம், கன்னடம் தெலுங்கு, ஹிந்தி, தமிழ் இன்னும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சகோதரி மரிய பவுஸ்தீனா சயரோக :நோயால் பாதிக்கப்பட்டு மிகத் துன்புற்றார். தன்னுடைய துன்பங்களை பாவிகளுக்காக ஒப்புக்கொடுத்தார்.

தமது 33ஆம் வயதில் கிராக்கோ எனும் ஊரில் 1938 ஆம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

1966ம் ஆண்டு அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டு மடத்துக் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. அப்போது போலந்தில் கருதினாலாக இருந்த கரோல் வைத்தீவோ ( திருத்தந்தை 2ஆம ஜோன் பவுல்) 1968ல் முத்திப் பேறுபட்டத்திற்கான அலுவல்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கினார்.

1993 ஏப்ரல் 18ஆம் திகதி திருத்தைந்தை 2 ஜான் பவுல் முத்திப்பேறுபெற்றவர் என அறிவித்தார். பின்னர் 2000 ஆண்டு ஏப்ரல் 30 நாள் திருத்தைந்தை 2 ஜான் பவுல், சகோதரி மரிய பவுஸ்தினாவை புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்காவாக அறிவித்தார்.

கடவுள் எல்லோரையும் அன்புசெய்கிறார். நாம் எவ்வளவு பெரும் பாவியாக இருந்தாலும் அவரது அளவிடமுடியாத இரக்கத்தில் நம்பிக்கை வைத்து அவரை நாடி நம் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கோரும்போது கடவுளின் அளவிடமுடியாத இரக்கம் நம்மீது பாய்ந்து வரும்.

பாவியின் சீர்கேடு எவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவுக்கு இரக்கத்தை பெறும் உரிமையும் அதிகமாக உள்ளது. ஆழம் காண முடியாத எனது இரக்கத்தில் நம்பிக்கை வைக்க எல்லா ஆன்மாக்களுக்கும் அழைப்பு விடு, எனெனில் எல்லாரையும் மீட்க நான் விரும்புகிறேன். எல்லா ஆன்மாக்களுக்காகவும் சிலுவை மரத்தில் ஈட்டியால் குத்தி திறக்கப்பட்டுள்ளது எனது இரக்கத்தின் ஊற்று. நான் யாரையும் ஒதுக்கி விடுவது இல்லை.

என் இரக்கத்தை நீங்கள் பெற்றது போல் நீங்களும் பிறருடன் இரக்கத்தோடு நடந்துகொள்ளுங்கள். நான் மன்னிப்பதுபோல் பிறர் குற்றங்களை நீங்களும் மன்னியுங்கள். பாவத்தில் வீழ்ந்துகிடக்கும் ஆன்மாக்களை இரக்கமுள்ள என் இதயத்தருகே வரும்படி சொல். நான் அமைதியால் நிரப்புவேன். நம்பிக்கையோடு என் இரக்கத்தை நாடி என்னிடம் வருவோருக்கு மீட்பை அள்ளித்தருவேன் என்று இயேசு திருவாய்மொழிந்தருளினார்.

**-எல்.எஸ்**




## உயிர்த்தெழுதல் தரும் நம்பிக்கை

**திருத்தந்தை பிரான்சிஸ்**



ஆண்டவரின் உயிர்த்தெழுதல், நம்மை நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் முன்னோக்கிச் செல்லத் தூண்டுகிறது என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலானது வெறுமையான கல்லறையைக் கண்ட பெண்களின் மகத்தான வியப்பையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்க நம்மை அழைக்கிறது.

நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் வளரவும் இறைவனுடனான நமது முதல் சந்திப்பின் அருளை மீண்டும் பெறவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

உயிர்ப்புப் பெருவிழாத் திருவிழிப்புத் திருப்பலியில் ஆற்றிய மறையுரையின் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உயிர்த்த ஆண்டவர் நமது நம்பிக்கையை புதுப்பிக்கவும் புதிய வாழ்வுக்கு உயிர்த்தெழவும் நம்மை அழைக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

இயேசுவின் கல்லறையைக் காணப் புறப்பட்ட பெண்கள் வெறுமையாக இருந்த கல்லறையையும் கலிலேயாவிற்குச் சீடர்களை அழைக்கும் உயிர்த்த ஆண்டவரையும் நேரில் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்ததை எடுத்துக் கூறும், நற்செய்தி வாசகத்தை மையமாகக் கொண்டு தனது சிந்தனைகளை பகிர்ந்து கொண்டார் திருத்தந்தை.

சீடர்களின் மறுபிறப்பு மற்றும் அவர்களின் இதயங்களின் உயிர்த்தெழுதல் ஆகியவை, கலிலேயாவில் தாங்கள் தொடக்கத்தில் பெற்றுக்கொண்ட நம்பிக்கைக்கு மீண்டும் திரும்புவதற்கு அழைப்பு விடுக்கிறது என்பதையும் குறிப்பிட்டார் திருத்தந்தை.

நிகழ்காலத்தை ஏமாற்றம், கசப்பு அல்லது திகைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே நாம் பார்க்கும் போது, எதையும் மாற்ற முடியாது என்று நம்பி சில வேளைகளில் நாமும் கூட சோகத்தில் மூழ்கிவிட வாய்ப்புண்டு.

இறைவனுடனான நமது முதல் நம்பிக்கை சந்திப்பை கடந்த காலத்திற்குச் சொந்தமானதாகவும், இருள், போர், அலட்சியம் மற்றும் நிச்சயமற்ற எதிர்காலம் போன்றவற்றால் நிறைந்துள்ள இன்றைய கடினமான உலகில், குறைவான பொருத்தம் கொண்டதாக சில வேளைகளில் நம் மனதில் பதிய வைக்கலாம் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த ஏமாற்றம், நம்பிக்கையின் ஊற்று நமக்குள் வற்றுவதற்கு வழிவகுக்கும் என்றும் எச்சரித்தார்.

இயேசுவின் உயிர்ப்பின்போது பெண்கள் வெறுமையான கல்லறை மற்றும் அவரின் உயிர்த்தெழுதலின் அனுபவத்தால் உடனடியாக மனமாற்றமடைந்தனர் என்று விளக்கிய திருத்தந்தை,வாழ்க்கையையும் வரலாற்றையும் என்றென்றும் மாற்றக்கூடிய 'கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்!' என்ற இந்தச் செய்தியை சீடர்களிடம் கூற, அச்சத்தின் நிலையிலும், மகிழ்ச்சியில் திளைத்தவர்களாக அவர்களை நோக்கி விரைந்தோடினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**அருட்பணி**
**செல்வராஜ் சூசைமாணிக்கம்**

## உயிர்த்த ஞாயிறு சிறப்புத் திருப்பலி



நுவரெலியா புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு சிறப்புத் திருப்பலியின் போது அருட்தந்தை அந்தனி ஜஸ்டின் அடிகளார் மற்றும் அருட் சகோதரர் அன்ட்ரூ பிரெங்லின் ஆகியோர் இணைந்து திருப்பலியை ஒப்புக் கொடுப்பதையும் திருப்பலியில் கலந்து கொண்ட விசுவாசிகளின் ஒரு பகுதியினரையும் அருட்தந்தையால் ஒளியேற்றும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம். படங்கள் உதவி: செல்வராணி ஒகஸ்டின்

# உயிர்ப்பின் அனுபவம்

இந்த பிரபஞ்சத்தை நாம் அண்ணாந்து பார்க்கையில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் அழகை வாரி இறைக்கும். ஆனாலும் நம் கண்களுக்கு சூரியனும் நிலவும் தனியோர் அழகு. அதைப் போல் தான் என்றும் வாழும் நற்செய்திகள்.

இயேசு மார்த்தாளிடம் உயிர்ப்பும் உயிரும் நானே என்றார். இந்த வரிகள் தத்துவ ஆழமும் ஆன்மீக உச்சமும் கொண்டு நம்மை பிரமிப்பூட்டுகின்றன. விவிலிய உட்பொருளின் எதிரொலியாக இந்த வரிகள் உள்ளன..

ஆன்மீக அனுபவத்தில் மனிதன் பாவங்கள் செய்து இறந்துவிட்டான். அவனது முதல் தேவை பாவத்திலிருந்து வெளிவருதல். மீண்டும் மறுபிறப்பு. மரணத்திலிருந்து வாழ்விற்கு உயிர்த்தெழுதல் வேண்டும்.

ஊதாரி மகன் மனந்திருந்தி திரும்பியபொழுது தந்தை கூறுகின்றார். “என் மகன் இறந்து போயிருந்தான். மீண்டும் உயிர்பெற்று வந்துள்ளான்” (லூக்கா 15:24)

இதுவே உயிர்ப்பு. இந்த வார்த்தையை நாம் உற்று நோக்க வேண்டும். இது எல்லாருடைய மனதிலும் எழும் முக்கியமான கேள்வி. உயிர்ப்பு என்றால் என்ன?.

உயிர்ப்புக்கான பதிலை, விளக்கத்தை வார்த்தைகளால் சொல்லிவிடமுடியாது. அது ஓர் அனுபவம். பேசாதமொழி. உயர்ப்பின் விளக்கத்தை, பதிலைத் தேடி ஆழமாக சென்றால் கேள்வி மறைந்துவிடும். அது ஒரு அனுபவமாக மாறிவிடும்.

இயேசு உயிர்த்த அன்றே உயிர்ப்பிற்கு ஒரு அழகான நிகழ்வை நடத்திக் காட்டுகின்றார்.

மரியா இயேசுவின் கல்லறைக்கு வெளியே நின்று அங்குள்ள தோட்டக்காரரைப் பார்த்து “உடலை எங்கே வைத்தனர்?” என்று வினவ, தோட்டக்காரரின் உருவத்தில் நின்ற இயேசு ‘மரியா‘ என்றார். உடனே மரியா அவரைப் பார்த்து “போதகரே” என்றார். அவள் இயேசுவைக் கண்டாள்.

தோட்டக்காரர் உருவத்தில் கண்டவரை, இயேசுவை உணருகின்றாள். அதுவே உயர்ப்பின் அனுபவம். அதை வார்த்தைகளால் கூறமுடியாது.

நமக்கு நாம் நினைக்கும் உண்மையை மட்டும் சித்தரிக்கும். உயிர்ப்பை அறியும் முயற்சியே நம்மை வழி தவறச் செய்கிறது. உயிர்ப்பை உணரலாம். ஆனால் விவரிக்க முடியாது. அது நமக்குள் இருக்கமுடியும். உள்ளத்தின் உள்ளே இருந்து மட்டுமே உணர முடியும். அது ஓர் ஆன்மீக பிறப்பு.

இந்த உயிர்ப்பின் அனுபவத்தை வெகு தெளிவாக பவுலடியார் கூறுகின்றார். இனி வாழ்வது நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். (கலா. 2:20)

இதில் ”வாழ்வது நானல்ல” என்பது உயிர்ப்பாகும். கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என்பது உயிர்.

பழைய பாவ ஆசைகள், வாழ்க்கை முறைகளை விட்டு புதிய சுகத்துடன் மாற்றப்பட்டு கிறிஸ்துவுடன் நம்மை அடையாளம் காணலாம். உயிர்ப்பு பேசாத மொழி பந்தி மேற்பார்வையாளன் நீரை இரசமாக சுவைத்த அனுபவம்.



தோட்டக்காரரை இயேசுவாக பார்த்த அனுபவம். சமாரிய நாட்டின் கிணற்றடியில் களைப்பாக காணப்பட்ட இயேசுவை மெசியாவாக கண்ட அனுபவம்..

அந்த அனுபவம் என்பது கிறிஸ்து என்னில் வாழ்கிறார் என்ற நிலையாகும். நம்வாழ்வில் கிறிஸ்துவின் பிரசன்னமாக கருதப்படும் பரிசுத்த ஆவியானவர், நமக்குள் வசிப்பதாகவும் கடவுளுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ வழிகாட்டுவதாகவும் புரிந்து கொள்ளலாம். அதுவே உயிர்ப்பின் உயிர் ஆகும்.

பழைய சுயத்திற்கு மரணம் மற்றும் கிறிஸ்துவில் வாழ்வதுமே உயிர்ப்பும் உயிரும் ஆகும்.

அந்த உயிர்ப்புடன் நாம் வாழ்ந்து காட்டுவோம். மனதில் இருக்கும் காயங்களுக்கு மென்மையான மருந்து போடுவதுதான் உயிர்ப்பும் உயிரும் நானே என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள்.. வாழ்ந்து காட்டுவோம்.இயேசுவின் உயிர்ப்பை எமது வாழ்விலும் நாம் அன்றாடம் அனுபவிப்போம்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது

ஒன்றி இருந்தவர்களிடையே உட்பகை தோன்றி விடுமானால், அதனால் ஏற்படும்

# பண்டிகைக் காலத்தில் உணவுகளின் தரத்தில் அதிக கவனம் அவசியம்!

பல்லின மக்கள் வாழும் இலங்கைத் திருநாட்டில் இவ்வருடத்தின் ஏப்ரல் மாதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. தமிழ், சிங்கள, கத்தோலிக்க, முஸ்லிம் ஆகிய நான்கு இன மக்களின் பண்டிகைககள் இம்முறை ஒரே மாதத்திற்குள் உள்ளடங்கி இருப்பதே அதற்கான காரணமாகும். அதாவது கத்தோலிக்க மக்களின் உயிர்த்த ஞாயிறு பண்டிகை, தமிழ்_ சிங்கள மக்களின் புத்தாண்டுப் பண்டிகை, முஸ்லிம்களின் ரமழான் நோன்பு பெருநாள் ஆகியனவே அப்பண்டிகைகளாகும்.

இப்பண்டிகைகளின் நிமித்தம் ஒவ்வொரு இன மக்களும் பயணங்கள் மேற்கொள்வதிலும் பண்டிகைக்குத் தயாராவதிலும் பொருட்கள் கொள்வனவு செய்வதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகிறனர். இதன் விளைவாக கொழும்பு உட்பட நாடெங்கிலுமுள்ள நகரங்களில் இந்த நாட்களில் மக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. தத்தம் பண்டிகையின் நிமித்தம் உடுதுணிகள், உணவுப்பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் கொள்வனவு செய்வதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஏனென்றால் 2019 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டுப் பிரஜைகளுக்கு அச்சம், பீதி இன்றி தத்தம் பண்டிகைகளை விமர்சையாகக் கொண்டாடுவதற்கு இற்றைவரையும் வாய்ப்பு கிடைக்கப் பெறவில்லை. 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல், 2020, 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 பெருந்தொற்று அச்சுறுத்தல், 2022 ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் நிலவிய தீவிர பொருளாதார நெருக்கடி என்பன இந்நாட்டு மக்களைப் பலவிதமான அசௌகரியங்களுக்கு உள்ளாக்கின.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைகளின் விளைவாக 2019 ஆம் ஆண்டுக்கு முன்னரைப் போன்று கடந்த நான்கு வருட காலப்பகுதியில் இந்நாட்டு பிரஜைகளால் தத்தமது பண்டிகைகளை அச்சம் பீதியின்றி கொண்டாடக் கூடிய சூழல் கிடைக்கப் பெறவில்லை. இவ்வருடம் அவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுவதாக இல்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு இம்முறை தத்தமது பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுவதில் மக்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளனர்.

அதனால் தற்போதைய சூழலில் நாட்டின் பல இடங்களிலும் சந்தைப்படுத்தப்படுகின்ற இனிப்புப் பண்டங்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் மற்றும் சமைக்கப்படுகின்ற உணவு வகைகளின் தரம் குறித்து விஷேட கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் வலியுறுத்தி உள்ளனர். அத்தோடு அவர்கள் நாட்டின் பல பிரசேங்களிலும் உணவுப் பொருட்கள் மற்றும் சமைக்கப்படுகின்ற உணவு வகைகளின் தரம் குறித்து அடிக்கடி பரிசோதனைகளையும் தேடுதல்களையும் முன்னெடுக்கவும் செய்கின்றனர்.

இதேவேளை ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு நுவரெலியாவுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், ஹோட்டல்களிலும் வசந்த காலத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக சிற்றுண்டிச்சாலைகளிலும் உணவு வகைகளையும் இனிப்புப் பண்டங்களையும் உண்ணக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

இந்த உணவு வகைகளும் இனிப்புப் பண்டங்களும் உரிய முறையில் தயாரிக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் அவற்றின் காலாவதியாகும் காலம் என்பது குறித்தும் பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அடிக்கடி பரீட்சிக்கவும் செய்கின்றனர்.

இந்நிலையில் நுவரெலியா மாநகரப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், 'சுற்றுலாப் பயணிகள் தாம் உட்கொள்ளும் உணவு வகைகளதும் இனிப்புப் பண்டங்களதும் தரம் மற்றும் அவை உரிய சுகாதார முறைப்படி தயாரிக்கபட்டுள்ளனவா என்பது குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்' என்று பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தற்போது வசந்தகாலப் பண்டிகைக் காலமாகையால் நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெரிதும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி காலாவதியான மற்றும் மனித பாவனைக்கு உதவாத உணவு மற்றும் இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்யக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அதனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டிய பொறுப்பு மக்கள் முன்பாக உள்ளது' என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உண்மையில் இது காலத்திற்கு மிகவும் அவசியமான அறிவுறுத்தல். இப்பண்டிகைக் கால சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தரமற்ற மற்றும் மனித பாவனைக்கு உதவாத உணவு வகைகளும் இனிப்புப் பண்டங்களும் சந்தைப்படுத்தப்படக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகிறது. பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் தற்போதைய காலப்பகுதியில் வழமையை விடவும் திடீர் சோதனைகளையும் தேடுதல்களையும் முன்பை விடவும் அதிகளவில் முன்னெடுக்கின்றனர்.

உணவு வகைகள் மற்றும் இனிப்புப் பண்டங்களின் தரம் மற்றும் காலாவதியாகும் திகதி குறித்து மக்களும் கவனம் செலுத்தத் தவறக் கூடாது. அதன் ஊடாக ஆரோக்கிய ரீதியிலான வீணான உபாதைகளை தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# பொருளாதார நெருக்கடி தணிந்து வருகின்ற போதிலும் மலையகத்தில் பொருட்களின் விலை குறையவில்லை!

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி தணிவடைந்து நிலைமை படிப்படியாகச் சீரடைந்து வருகின்ற போதிலும், மலையகத்தில் உணவுப் பொருட்களை வியாபாரிகள் அதிக விலையிலேயே இப்போதும் விற்பனை செய்து வருவதாக நுகர்வோர் புகார் தெரிவிக்கின்றனர். அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகளை அரசாங்கம் குறைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் பலாங்கொடை மற்றும் மலையகத்தின் பல பிரதேசங்களிலுள்ள பெரும்பாலான வியாபார நிலையங்களில் பொருட்களின் விலை குறைப்பு ஏற்படவில்லை எனவும், முன்னைய விலைகளிலேயே பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் கவலை தெரிவிக்கி ன்றனர்.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களுக்கான மொத்த, சில்லறை விலைகள் குறைக்கப்பட்டுள்ள விபரங்கள் ஊடகங்களில் பகிரங்கமாக பிரசாரப்படுத்தப்படுகின்றன.



ஆனால் வியாபாரிகள் இந்த விலைக் குறைப்பையெல்லாம் புறக்கணித்து பொருட்களை அதிக விலைகளில் விற்பதனால் நகரப் புறங்களில் மாத்திரமன்றி கிராமங்கள் தோட்டப் பகுதிகளிலும் வாழும் மக்களும் பாதிப்புக்கு உட்படுவதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவற்றைக் கண்காணிக்க நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு சுகாதார மற்றும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் எனப் பலர் இருந்தாலும்இவ்விடயத்தில் அவர்கள் பாராமுகமாக இருப்பதாக மக்கள் புகார் கூறுகின்றனர்.

குறைந்த வருமானம் பெற்று வருவதால் ஏற்கனவே பல வழிகளிலும் மலையக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான மக்களுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்தில் வியாபாரிகள் பொருட்களின் விலையை இன்னுமே குறைக்காமல் உள்ளதாக மக்கள் கூறுகின்றனர். இது அநீதியாகும் எனவும் சுட் டிக்காட்டப்படுகிறது.

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

# புத்தாண்டுப் பண்டிகைக்காக யாசகர்களை தயார்படுத்திய மனிதநேய ஆர்வலர்கள்!

மலரவிருக்கும் தமிழ்_ சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு, பாணந்துறை நகரப்பகுதியில் பிச்சையெடுத்து வாழ்கின்ற யாசகர்களுக்கு ஆதரவளிக்கும் மனிதநேய வேலைத்திட்டமொன்று சில தினங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டது. பாணந்துறை பிரதேசத்தின் பல்வேறு பொதுஇடங்களிலும் தஞ்மடைந்துள்ள யாசகர்களை தமிழ்_சிங்கள புத்தாண்டுக்கு தயார்படுத்தி மகிழ்விக்கும் முன்மாதிரியான சிறந்த மனிதநேய வேலைத் திட்டம் சமூக ஆர்வலர்களால் முன்னெடுக்கப்பட்டது.

பாணந்துறையில் பிரபல சமூக வலைத்தள மற்றும் சுயாதீன செய்தியாளரான சமன் காரியவசத்தின் ஏற்பாட்டில் மனிதநேய ஆர்வலர்கள் பலரின் அனுசரணையுடனும், அரசதுறை சார்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.வெளிநாட்டில் வாழ்கின்ற இலங்கையர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

யாசகர்களும் மனிதர்களேயாவர். வர்களையும் மனிதர்களாக மதிக்க வேண்டும். புத்தாண்டில் சாதாரண மக்களைப் போன்று யாசகர்களையும் மகிழ்ச்சியுறச் செய்தல் வேண்டும். நன்றியுணர்வு கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் இத்திட்டத்துக்காக ஒத்தாசைகள் வழங்கியதாகத் தெரிவித்த திட்டத்தின் முன்னோடியான சுயாதீன செய்தியாளர் சமன், அப்பாவி மனிதர்களுக்கு உதவியதில் அனைவரும் பெருமகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டார்.

பாணந்துறையில் சிறந்த, அழகான முன்மாதிரியொன்றை தேசத்துக்கு எடுத்துக் காட்டியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த மனிதாபிமானப் பணிக்கு உதவிய அனைவர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.







இந்த அப்பாவி மனித ஜீவன்களை பாணந்துறை நகர் கடற்கரைப் பிரதேசத்துக்கு ஒன்றுதிரட்டிய மனிதநேய செயற்பாட்டாளர்கள் காலை முதல் மாலை வரையில் அவர்களுக்கு பணிபுரிந்தனர். அவர்களுக்கு முகச்சவரம் செய்து, முடிவெட்டி குளிக்க வைத்தனர். அவர்களுக்கு உணவு வழங்கி புத்தாடைகளையும் வழங்கினர். இவர்கள் மகிழ்ச்சியுடன் நாளைக் கடத்தி மகிழ்ச்சியுடன் தமது முன்னைய இடங்களுக்கு கலைந்தனர்.

பாணந்துறை பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகே, தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் உபுல் பிரியங்கர, நகராட்சி மன்ற செயலாளர், பொது சுகாதாப் பரிசோதகர் மற்றும் நகரசபை அதிகாரிகள், சலூன் உரிமையாளர் உள்ளிட்ட பல்துறைசார்ந்த பொதுமக்கள் இந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்காக சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்
பாணந்துறை

# பேருவளையில் 600 குடும்பங்களுக்கு துருக்கியினால் உலருணவுப் பொதிகள்

துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தினால் புனித ரமழானை முன்னிட்டு பேருவளை நகரசபை பகுதியில் 600 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது.

பேருவளை சபுகொட மஹாவிகாரையில் 180 குடும்பங்களுக்கும், மருதானை அல்பாஸியத்துல் நஸ்ரியா மகளிர் கல்லூரியில் 420 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் R.DEMET SEKER CIOGLU நிகழ்வில் கலந்து கொண்டு அவற்றைக் கையளித்தார். சபுகொட விகாரையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு விகாராதிபதி தங்கல சாரத தேரோ தலைமை வகித்தார். அதன் பரிபாலன சபை செயலாளர் டி.டி.குணசிங்க உட்பட பலரும் இங்கு உரையாற்றினர். கினியாவல பாலித தேரோவின் வழிகாட்டலின் கீழ் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

சமயப் பாடசாலை சிறார்களுக்கு தூதுவர் இனிப்புப் பண்டங்களை வழங்கி அவர்களை மகழ்வித்தமை குறிப்பிடத்தக்கது.

அல்பாஸியத்துல் நஸ்ரியாவில் இடம் பெற்ற நிகழ்வுக்கு அப்ரார் பவுண்டேசன் தலைவர் நிஸாம் தலைமை வகித்தார். அதன் உறுப்பினர்களான டில்சாத் அன்வர், றிஸ்கான் அப்துல் ஹமீத், எம்.எஸ்.எம்.ஹுஸைன், எம்.இஹ்ஸான் ஆசிரியர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.








துருக்கி தூதரக அதிகாரி எம்.எஸ்.எம்.ராபி நிகழ்வை தெரியப்படுத்தினார்.

துருக்கி தூதுவர் இங்கு உரையாற்றும் போது "இலங்கைக்கும் துருக்கி நாட்டுக்கும் இடையிலான உறவு நீண்ட காலமாக இருந்து வருகிறது. இருநாடுகளுக்குமிடையில் வர்த்தக,பெருளாதாரம் உள்ளிட்ட பல துறைகளில் உறவு மிகவும் சக்தி பெற்று விளங்குகிறது. துருக்கி மக்கள் இலங்கை தேயிலையை மிகவும் விருப்பத்துடன் அதிகளவில் பாலிக்கின்றனர். அதே போல் கூடுதலானோர் உல்லாசப்பயணிகளாக இலங்கைக்கு வருகின்றனர்.நோன்பு நோற்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் சிங்கள _ தமிழ் புத்தாண்டை கொண்டாடும் சிங்கள சகோதரர்களுக்கும் மணிதாபிமான அடிப்படையில் உதவி செய்யக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

சபுகொட விகாராதிபதி பேசும் போது துருக்கி நாடு பாரிய நிலநடுக்கத்தைச் சந்தித்து 50,000 பேர் வரை பலியான நிலையில், இதுபோன்ற உதவியைச் செய்வதை பாராட்ட வேண்டும்" என்றார்.

இரு சமூகங்களுக்கிடையில் இன உறவை மேலும் கட்டியெழுப்ப இது ஓர் உந்து சக்தியாக அமையும் என்றார்.

பேருவளை பீ.எம்.முக்தார்

# சர்வதேச லயன்ஸ் வலையமைப்பில் இணைந்து கொண்ட நிந்தவூர் சுப்ரீம்

லயன்ஸ் கழகத்தின் இலங்கைக்கான 306 C2 மாவட்டத்தின் கீழ் மிகச் சிறப்பாக இயங்கிவரும் சம்மாந்துறை கோல்டன் சிட்டி லயன்ஸ் கழத்தின் மூலம் புதிய கழக விரிவுபடுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை உத்தியோகபூர்வமாக சர்வதேச லயன்ஸ் கழத்தில் உள்வாங்கும் நிகழ்வுகள் லயன்ஸ் கழகத்தின் இலங்கைக்கான மாவட்ட GMT ஒருங்கிணைப்பாளரும் புதிய கழக உள்வாங்கல் தவிசாளருமான லயன் சாஹிர் அஹமட் தலைமையில் நிந்தவூரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத்தின் 306 C2 மாவட்டத்தின் ஆளுநர் லயன் பென்னட் கம்லத் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் லயன் பெண்கள் அமைப்பின் தலைமைப் போசகரும் முதல் பெண்மணியுமான திருமதி சரோஜனி கமலத்தும் வருகை தந்திருந்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட அவையின் செயலாளர் லயன் கயா உபசேன, புதிய கழகத்தின் விரிவாக்கல் தலைவர்களில் ஒருவரும் மாவட்ட ஆளுநரின் மாவட்டத்திற்கான விசேட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான சம்மாந்துறை கோல்டன் சிட்டி லயன்ஸ் கழகத்தின் லயன் MIM. சியாத் மற்றும் மாவட்ட ஆளுநரின் மாவட்டத்திற்கான நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான சம்மாந்துறை கோல்டன் சிட்டி லயன்ஸ் கழகத்தின் லயன் MBM. பௌஸான் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

பிராந்திய தவிசாளர் லயன் சிசிர அலஹகோன், வலயத்திற்கான தவிசாளர் லயன் MTA. அனாப், சம்மாந்துறை கோல்டன் சிட்டி லயன்ஸ் தலைவர் லயன் கலாநிதி ZA. பஸீர், செயலாளர் லயன் AJM. ராபி, பொருளாளர் லயன். SM. நபீர் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாணசபையின் செயலாளர் லயன் MM. நஸீர் கலந்து கொண்டிருந்தார்.



நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகத்தின் தலைவராக லயன். S. அறூப் அர்ஷத், செயலாளராக லயன் MY. அஸ்லி யூசுப், பொருளாளராக லயன் A. ரிலா இப்றாஹிம் தெரிவு செய்யப்பட்டனர்.

நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழக உறுப்பினர்கள், குடும்பத்தினர், பிராந்தியத்தில் உள்ள ஏனைய லயன்ஸ் கழக உறுப்பினர்கள், ஊர்ப்பிரமுகர்கள், நலன்விரும்பிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் பொன்னாடை அணிவித்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிந்தவூரின் கபடி வீரர் அஸ்லம் சஜா இலங்கை தேசிய கபடி அணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய நிந்தவூர் சுப்ரீம் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் S. அறூப் அர்ஷத், "எமது இளம் தலைமுறையினரை விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பளிப்பதன் மூலம் போதைப்பொருள் மற்றும் எலக்ரோனிக் சாதனங்களுக்கு அடிமையாவதிலிருந்து அவர்களை தடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்" என்று அறிவித்தார். மேலும் நிந்தவூர் தளவைத்தியசாலைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் ஒரு தொகையினை விரைவில் வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏ.எல்.ஏ.றபீக் பிர்தௌஸ்

## புத்தாண்டு சம்பியனாக வி.ஆர்.கே அணி தேர்வு



காரைதீவு குறூப் நிருபர்

சித்தரை புத்தாண்டை ஒட்டி கல்முனையில் நடத்தப்பட்ட புத்தாண்டு கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வி.ஆர்.கே அணி வெற்றியீட்டி புத்தாண்டு சம்பியனாகத் தெரிவானது.

கிரிக் பிரீத் ஏற்பாட்டில் கல்முறை உவெஸ்லி மைதானத்தில் கடந்த ஞாயிறு (09) நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஷேஷான் இலவன் லெபர்ட்ஸ் அணியை வி.ஆர்.கே அணி வீழ்த்தியது. இதன்போது 47 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய வி.ஆர்.கே அணி 6.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

கல்முனையின் பாரம்பரியம் மிக்க பழைய கழகங்களுடன் சில புதிய கழகங்களும் சேர்ந்து மொத்தமாக 07 அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்றன.

## தேசிய கடற்கரை கரப்பந்து மேயில்

சன்குயிக் தேசிய கடற்கரைக் கரப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டி எதிர்வரும் மே 19, 20 மற்றும் 21ஆம் திகதிகளில் நீர்கொழும்பு, குடாபடுவ, கடற்கரை பூங்காவில் நடைபெறவுள்ளது.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் இந்தப் போட்டிக்கு 22, 19 மற்றும் 16 வயதுக்குட்பட்ட நான்கு வயதுப் பிரிவுகளின் கீழ் ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பாலாருக்குமாக நடைபெறவுள்ளது.

நூறுக்கும் மேற்பட்ட நாடுகள் உட்பட உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கானவர்களால் விரும்பப்படும் தாகத்தைத் தணிக்கும் பானமான சன்குயிக் இலங்கை தேசிய விளையாட்டுக்கு தொடர்ந்து ஊக்கமளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மத்தி 223 ஓட்டம்





ரஞ்சித்குமார் நியுடன்

பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட பிரிவு மூன்று ஏ குழுவுக்கான இறுதிப் போட்டியில் திம்பிரிகஸ் கட்டுவ, மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரிக்கு எதிராக யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் ஸ்திரமான ஓட்டங்களை பெற்றுள்ளது.

கொழும்பு, புனித ஜோசப் கல்லூரி மைதானத்தில் நேற்று (10) ஆரம்பமான இரண்டு நாட்களைக் கொண்ட இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற யாழ். மத்திய கல்லூரி அணியின் ஆரம்ப வீரர் ரஞ்சித்குமார் நியுடன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.

ஆரம்ப விக்கெட்டுக்காக அவர் ஜகதீஸ்வரன் விதுரசனுடன் இணைந்து 80 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். விதுரசன் 33 பந்துகளில் 32 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அரைச்சதத்தையும் கடந்து ஓட்டங்களை அதிகரித்த நியுடன் 88 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 82 ஓட்டங்களை பெற்றார். தொடர்ந்து வந்த அணித் தலைவர் ஆனந்தன் கஜன் முகம்கொடுத்த முதல் பந்திலேயே பூஜ்யத்திற்கு வெளியேற அடுத்து வந்த தகுதாஸ் அபிலாஷினால் 8 ஓட்டங்களையே பெற முடிந்தது.

மத்திய வரிசையில் சுதர்ஷன் அனுஷாந்த் 32 ஓட்டங்களையும், நிஷாந்தன் அஜய் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதன்மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்ஸுக்கு 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 223 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரி சார்பில் சிறப்பாக பந்துவீசிய விஷ்வ பீரிஸ் 15 ஓவர்களில் 72 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். சவிந்து பெரேரா மற்றும் யொஹான் பெர்னாண்டோ தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இந்தத் தொடரில் தனது முழுத் திறமையை வெளிப்படுத்தி வரும் யாழ். மத்திய கல்லூரி அணி காலிறுதிக்கு முந்திய போட்டியில் பென்தொட்ட, காமினி தேசிய கல்லூரியை வீழ்த்தியதோடு, காலிறுதியில் புத்தளம், ஆனந்த தேசிய கல்லூரியை தோற்கடித்தது. இந்நிலையில் கடந்த வாரம் நடந்த அரையிறுதியில் ஹோமாகம, மஹிந்த ராஜபக்ஷ தேசிய பாடசாலையை 9 விக்கெட்டுகளால் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.



## 5 பந்துகளில் 5 சிக்ஸர் விளாசி ரின்கு சாகசம்

குஜராத் டைடன்ஸ் அணிக்கு எதிரான இந்திய பிரீமியர் லீக் போட்டியில் ரின்கு சிங் கடைசி ஐந்து பந்துகளுக்கும் ஐந்து சிக்ஸர்களை விளாசி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிராக 3 விக்கெட்டுகளால் த்ரில் வெற்றியை பெற்றுக்கொடுத்தார்.

அஹமதாபாத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்ற போட்டியில் 205 ஓட்ட வெற்றி இலக்கை துரத்திய கொல்கத்தா அணி கடைசி ஓவருக்கு 29 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. கடைசி ஓவரை வீசிய யாஷ் தயாலின் பந்துகளை ரின்கு துவம்சம் செய்தார்.

இதன்போது கடைசி ஐந்து பந்துகளுக்கு 28 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தபோதே அடுத்தடுத்து ஐந்து சிக்ஸர்களை விளாசினார்.

இதன்படி டி20 போட்டி ஒன்றின் கடைசி ஓவரில் வெற்றிகரமாக அதிகூடிய ஓட்டங்களை எட்டியதாக இது சாதனை படைத்தது. முன்னதாக 2015 பிக் பாஷ் லீக்கில் சிட்னி தண்டர் அணிக்கு எதிராக கடைசி ஓவரில் சிட்னி சிக்ஸர் 23 ஓட்ட இலக்கை எட்டியதே சாதனையாக இருந்தது.

ரின்கு சிங் 21 பந்துகளில் 48 ஓட்டங்களை விளாசினார்.

## இலங்கை வந்தது அயர்லாந்து



இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுவதற்காக அயர்லாந்து அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) இலங்கை வந்தடைந்தது. பங்களாதேஷில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்த நிலையிலேயே அயர்லாந்து அணி அங்கிருந்து நேராக இலங்கை வந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு டெஸ்ட் வரம் பெற்ற அயர்லாந்து அணி இதுவரை ஆடிய நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்துள்ளது. அந்த அணி இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியொன்றில் முதல் முறையாக ஆடவுள்ளது.

இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகள் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இலங்கையில் ஒரு டெஸ்ட் பேட்டியில் ஆட இணங்கியபோதும் கடந்த ஆண்டு இடம்பெற்ற குழப்ப சூழல் காரணமாக அந்த டெஸ்ட் போட்டி இந்த ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் அது இரண்டு டெஸ்ட் போட்டிகளாக மாற்றப்பட்டன.

இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் ஏப்ரல் 16 ஆம் திகதியும் இரண்டாவது போட்டி ஏப்ரல் 24 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு போட்டிகளும் காலி சர்வதேச மைதானத்திலேயே நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

## தாய்வானை சுற்றி சீனா போர் ஒத்திகை



தாய்வானுக்கு அருகில் போர் ஒத்திகை மேற்கொண்டு வரும் சீனா அதன் மூன்றாவது நாளான நேற்று (10) தாய்வானை முற்றுகையிடுவதை உருவகப்படுத்தும் வகையில் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளது.

இதன்போது அந்த தீவை நோக்கி ஜெட் விமானங்களை செலுத்துவதற்கு விமானதாங்கி கப்பல் ஒன்றை பயன்படுத்தியது.

நாட்டின் கிழக்குப் பக்கத்தில் ஜெட்களை அவதானித்ததாக தாய்வான் கூறியிருக்கும் நிலையில் தனது ஷங்டொங் விமானதாங்கி கப்பல் இதில் பங்கேற்றிருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

கலிபோர்னியாவில் அமெரிக்க பாராளுமன்ற சபாநாயகரை தாய்வான் ஜனாதிபதி ட்சை இங் வென் சந்தித்ததை அடுத்து சீனா கடந்த சனிக்கிழமை இந்தப் போர் ஒத்திகையை ஆரம்பித்தது.

தாய்வான் தம்மை இறைமை கொண்ட நாடாக கருதியபோதும் அதனை தமது நாட்டின் பிரிந்து சென்ற மாகாணமாகவே சீனா கருதுகிறது.

இந்நிலையில் தமது நீர்ப் பகுதியை சுற்றி 70 போர் விமானங்கள் மற்றும் 11 கப்பல்களை அவதானித்ததாக தாய்வான் நேற்று தெரிவித்தது.

அதற்குப் பதிலடியாக தாய்வானின் ஆயுதப் படை அதன் சொந்தப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## அமெரிக்க இரகசிய ஆவண கசிவினால் பெரும் பரபரப்பு

### நட்பு நாடுகளை உளவு பார்த்தது அம்பலம்



ரஷ்யாவுடனான போரில் உக்ரைனின் பாதிப்புகள் உட்பட அமெரிக்காவின் நட்பு நாடுகள் பற்றி முக்கிய தகவல்களை அப்பலப்படுத்தும் மிக ரகசியமான ஆவணங்கள் கசிந்திருப்பதன் மூலத்தை கண்டறிய அமெரிக்கா போராடி வருகிறது.

இந்த ஆவணக் கசிவு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்கும்படி அமெரிக்க நீதித் திணைக்களத்திற்கு அந்நாட்டு பாதுகாப்புத் தலைமையகமான பெண்டகன் முறையாக கோரிக்கையை விடுத்துள்ளது.

கசியவிடப்பட்டிருக்கும் இந்த ஆவணங்கள் ட்விட்டர் உட்பட சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

அமெரிக்க இராணுவத்தின் கூட்டுப் பணியாளர்களால் தயாரிக்கப்பட்ட தினசரி புதுப்பிக்கப்படும் பொதுமக்களுக்கு அல்லாத தகவல்களின் கோர்வையாக இந்த ஆவணங்கள் உள்ளன. இதில் உக்ரைன், சீனா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா தொடர்பாக உளவுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கசிந்த ஆவணங்களில் உக்ரைன், தென் கொரியா மற்றும் இஸ்ரேல் உட்பட அமெரிக்கா தனது நட்பு நாடுகளை மிக நெருக்கமாக உளவு பார்ப்பது வெளிப்படையாகியுள்ளது. இது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்திற்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் கசியவிடப்பட்டிருக்கும் சில ஆவணங்கள் கற்பனையான தகவல்கள் மற்றும் ரஷ்யாவின் தவறான பிரசாரத்தைக் கொண்டிருப்பதாக உக்ரைனிய ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 23ஆம் திகதி இடப்பட்ட 'இரகசியம்' என்று அடையாளம் இடப்பட்டிருக்கும் ஓர் ஆவணம், உக்ரைனின் வான் பாதுகாப்பு அமைப்புகள் தற்போதைய விகிதத்தில் கையிருப்புகளைத் தொடர்ந்தால், மே மாதத்திற்குள் வெடிபொருட்கள் தீர்ந்துவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு ஆவணத்தில், இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவின் சர்ச்சைக்குரிய நீதித்துறை சீரமைப்புகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கு இஸ்ரேலின் மொசாட் உளவு நிறுவனம் ஆதரவு அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதனை அடிப்படை அற்றது என்று நெதன்யாகு அலுவலகம் மறுத்துள்ளது. இந்த விவகாரத்தில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

வெளியாகியுள்ள பல ஆவணங்கள் அமெரிக்காவிடமே இருந்ததால் இதனை அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரே அம்பலப்படுத்தியிருக்க வேண்டும் என பெண்டகனின் முன்னாள் அதிகாரியான மைக்கல் மல்ரே ரோய்ட்டர்ஸுக்கு தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன இதனை ரஷ்ய ஆதரவு சக்திகள் செய்திருப்பதற்கான நடவடிக்கைகளை நிராகரிக்க முடியாது என தெரிவிக்கும் அதிகாரிகள் விக்கிலீக்சிற்கு பின்னர் இவ்வளவு பெருமளவு தகவல்கள் கசிந்துள்ளது இதுவே முதல்தடவை என தெரிவித்துள்ளனர்.

## சவூதி தூதுக்குழு யெமன் ஹூத்திக்களுடன் பேச்சு



ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்களுடனான புதிய போர் நிறுத்தம் ஒன்றுக்கான பேச்சுவார்த்தைக்காக கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டு யெமன் தலைநகருக்கு சவூதி அரேபிய தூதுக் குழு ஒன்று பயணித்துள்ளது.

யெமனில் அமைதியை ஏற்படுத்துவதற்காக சானாவில் சவூதி அதிகாரிகள் பேச்சுவார்த்தையை முன்னெடுத்திருப்பதாக வளைகுடா பிராந்தியத்தை தளமாகக் கொண்ட யெமன் இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சீனாவின் மத்தியஸ்தத்தில் சவூதி மற்றும் ஈரானுக்கு இடையே இராஜதந்திர உறவை மீண்டும் ஏற்படுத்துவதில் இணக்கம் எட்டப்பட்ட நிலையிலேயே சவூதி தூதுக்குழுவினர் யெமன் பயணித்துள்ளனர்.

சவூதி தரப்பு இதனை உத்தியோகபூர்வமாக உறுதி செய்யாதபோதும் சவூதி மற்றும் ஓமான் தூதுக்குழுக்கள் சானா வந்திருப்பதாக ஹூத்திக்களின் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன. யெமன் தலைநகர் சானாவை 2014 ஆம் ஆண்டு ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியதை அடுத்தே அந்நாட்டின் சர்வதேச அங்கீகாரம் பெற்ற அரசுடன் மோதல் வெடித்ததோடு அங்கு சவூதி தலைமையிலான இராணுவக் கூட்டணி ஒன்று ஹூத்திக்களுக்கு எதிராக கடந்த எட்டு ஆண்டுகளாக போரிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் யெமனில் ஓர் ஆண்டாக போர் நிறுத்தம் ஒன்று நீடித்து வருவதோடு, அது கடந்த ஒக்டோபரில் முடிவுற்றபோதும் அங்கு மோதல்கள் கணிசமாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யெமன் போர் பல சிக்கல்களைக் கொண்டிருப்பதோடு ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் மற்றும் சவூதி தலைமையிலான கூட்டுப் படைக்கு எதிரான போர் தவிர, அங்கு அல் கொய்தா மற்றும் பல்வேறு தரப்புகளும் போர் புரிந்து வருகின்றன.

## இந்தியா–சிலி கலந்துரையாடல்

இலத்தீன் அமெரிக்க நாடான சிலியும் இந்தியாவும் எட்டாவது வெளிவிவகார அலுவலக ஆலோசனை சந்திப்பின் போது பிராந்திய மற்றும் பல்தரப்பு விடயங்கள் குறித்து கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டுள்ளன.

சிலி நாட்டின் வெளிவிவகாரக் கொள்கைக்கான செயலாளர் நாயகம் அலெக்ஸ் வெட்ஜிக் அப்டேலேயும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் (கிழக்கு) சவுரப் குமாரும் இக்கருத்துப் பரிமாறலை மேற்கொண்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலை உறுதிப்படுத்தியுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அரிந்தம் பக்ஷி, "வர்த்தகம், தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க சக்தி, விண்வெளி, சுரங்கம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பது குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்" என்று அவர் விடுத்துள்ள ட்வீட்டில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்டை திருடி இறைச்சிக்காக வெட்டிய மூவர் கைது

## இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் சம்பவம்

ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த ஆட்டை வெட்டி இறைச்சியாக்கி குறைந்த விலையில் விற்பனை செய்த சம்பவத்தில் மூவரை இராகலை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தை சேர்ந்த இருவரும்,இராகலை மேல் பிரிவு தோட்டத்தை சேர்ந்த ஒருவருமாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,..

இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் உடல் ஊனமுற்ற நபர் ஒருவர் தனது குடும்ப வாழ்வாதாரத்திற்காக ஆடு வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை வழமைப்போல ஆடுகளை மேய்ச்சலுக்கு விட்டுள்ளார். பின் மாலை ஆடுகளை மந்தைக்கு அழைத்து சென்ற போது ஆடுகளில் ஒன்று குறைந்துள்ளது.

அதேநேரத்தில் இராகலை பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலயம் அமைந்துள்ள தேயிலை மலையில் தோட்ட மக்களுக்கு குடி நீர் வழங்கும் பகுதிக்கு தண்ணீர் திறக்க சென்ற நபர் அவ்விடத்தில் இறைச்சிகளுடன் இரண்டு டியுலிப் கை பைகள் இருப்பதை அவதானித்து தோட்ட மக்களுக்கும் இராகலை பொலிசாருக்கும் தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார் டியுலிப் கை பைகளை பரிசோதித்த போது அதில் ஆட்டிறைச்சி இருப்பதை கண்டறிந்துள்ளனர்.

அதேநேரத்தில் காணாமற்போயுள்ள தனது ஆட்டை இறைச்சியாக்கியுள்ளதாக ஆட்டு சொந்தக்காரர் பொலிசாருக்கு தெரிவித்துள்ளதுடன் சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இப்பகுதியில் தொடர்ச்சியாக ஆடு, மாடுகளை களவாடி இறைச்சிக்காக விற்பனை செய்து வருவதை தொழிலாக கொண்டுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

## கழிவு தேயிலை தூளை ஏற்றிச் சென்ற மூவர் கைது

ஹற்றன் சுழற்சி நிருபர்

அனுமதிப்பத்திரமின்றி வேனில் கழிவு தேயிலை தூளை ஏற்றிச் சென்ற மூன்று சந்தேக நபர்களை வட்டவளை பொலிஸார் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்ததுடன் சந்தேக நபர்களை ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதன் பின்னர் சந்தேக நபர்கள் மூவரும் தலா இரண்டு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் 52 பைகளில் 800 கிலோ கழிவு தேயிலை தூளை அக்கரபத்தனையிலிருந்து கம்பளை வெலம்பொட பகுதிக்கு அனுமதிப்பத்திரம் இல்லாமல் வேனில் ஏற்றிச் சென்ற போது ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த வட்டவளை பொலிஸார் வட்டவளையில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்துள்ளனர்.

## கணவனால் தாக்கப்பட்ட மனைவி ஸ்தலத்தில் மரணம்

அக்குறணை குறூப் நிருபர்

குடும்பத் தகராறு காரணமாக 22 வயது ஒரு பிள்ளையின் தாயான இளம் பெண் ஒருவர் அவரது கணவனால் தாக்கப்பட்டு மரணமானதாக அரநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது

குடும்பத் தகராறு உச்ச நிலையை அடைந்து, கணவன் தனது மனைவியை கட்டை ஒன்றால் தாக்கியதில் மனைவி ஸ்தலத்தில் மரணடைந்துள்ளார். சம்பவத்தில் மரணித்தவர் மில்லங்கொடை என்ற இடத்தைச் சேர்ந்த மொஹொட்டிலாகே குமுதினி தேசானி ரனசிங்க என்பவராவார்.

பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் படி ஸ்தலத்திற்கு சென்ற போது அவர் மரணமடைந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான கணவன் பொலிசில் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பொலிகண்டியில் 84 கிலோ கஞ்சா மீட்பு



யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பொலிகண்டி கடற்கரையை அண்டிய பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 84 கிலோ கிராம் கேரளா கஞ்சா நேற்றைய தினம் அதிகாலை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த கடற்படையினர் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர். சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் , மேலதிக சட்ட நடவடிக்கைக்காக பொலிசாரிடம் கஞ்சாவை கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் 'மலையக இலக்கியம் 200'

## செந்தில் தொண்டமான் சிறப்பு விருந்தினர்



இலங்கை மலையக இலக்கியம் 200 விழாவில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி விஜயன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் 'மலையக இலக்கியம் 200' விழா, தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வி.திருவள்ளுவன், அயல் நாட்டு தமிழ் கல்வித்துறை தலைவர் இரா.குறிஞ்சி வேந்தன் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி விஜயன் மற்றும் எழுத்தாளர் சி.மகேந்திரன் ஆகியோர் பங்கேற்று விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

தமிழ் பல்கலைக்கழகத்தால் இந்தியாவில் வெளியிடப்பட்ட 'indo ceylon pact' என்ற புத்தகத்தின் முதல் பிரதியை தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி விஜயன், இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானிடம் கையளித்தார்.

# விழுமியம் காலாண்டு சஞ்சிகை வெளியீட்டுவிழா



ஆறு தசாப்தங்களுக்கு மேலான இதழியல் வரலாற்றைக் கொண்ட இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முத்திங்கள் வெளியீடாக 'விழுமியம்' காலாண்டு சஞ்சிகையின் உத்தியோகபூர்வ வெளியீட்டு விழா கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜமாஅத்தின் தலைவர் எம்.எச்.எம். உஸைர் இஸ்லாஹி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹகீம் கலந்து கொண்டு விஷேட உரையாற்றினார்.

சஞ்சிகையின் ஆய்வுரையை ஒளி, ஒலிபரப்பாளரும் மூத்த ஊடகவியலாளருமான கவிஞர் அஷ்ரப் ஷிஹாப்தீன் நிகழ்த்தினார். ஜமாஅத்தின் 65 வருட இதழியல் வரலாறு தொடர்பான விவரணப்படமும் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டது.

வரவேற்புரை தாருல் ஈமான் ட்ர்ஸ்ட் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ரிம்ஸான் ரபீக், நன்றியுரை ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி பாரிஸ் ஸாலி ஆகியோர் நிகழ்த்தினர்.

## மஹாஉவா தமிழ் மஹா வித்தியாலய பழைய மாணவர்கள் ஒன்று கூடலும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும்

நுவரெலியா மாவட்டம் வலப்பனை கல்வி வலயத்திற்குட்பட்ட மஹாஉவா தமிழ் மஹா வித்தியாலய பழைய மாணவர்கள் ஒன்று கூடலும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் (13) மற்றும் (14) ஆகிய இரு தினங்கள் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ்.செல்வகுமார் மற்றும் பழைய மாணவர்கள் சங்க செயலாளர் ஜோசப் சில்வஸ்டர் ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக எதிர்வரும் (13) ஆம் திகதி காலை வலப்பனை ஹரிஸ்பெத்த நகரில் இருந்து மஹாஉவா தமிழ் மஹா வித்தியாலயம் வரை பழைய மாணவர்கள் வாகன பேரணியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்




கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நோன்பு திறக்கும் விசேட இப்தார் நிகழ்வு கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர் சலீம்டீன் தலைமையில் நடைபெற்ற போது,..

இக்பால் அலி

# ஐ.நா.புள்ளிவிவர ஆணைக்குழு உறுப்பினராக இந்தியா

## 56 வாக்குகளில் 46 பெற்று முன்னணிக்கு வந்தது

ஐ.நா.வின் புள்ளிவிவர ஆணைக்குழு உறுப்பினராக இந்தியா தேர்வு செய்யப்பட்டுள்ளது. வாக்கெடுப்பின் மூலம் அதிக வாக்குகளைப் பெற்று அடுத்த ஆண்டு ஜனவரி முதல் உறுப்பினர் பதவியைப் பெறவுள்ள இந்தியா, அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இப்பதவியை வகிக்கும். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தன் ட்விட்டர் பதிவில் இத் தகவலை வெளியிட்டிருந்தார். உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகள், அவற்றின் வளர்ச்சி வீதம் என்பனவற்றைக் கண்காணிக்கும் ஒரு முக்கிய அதிகார சபையான இந்த ஆணைக்குழு, புள்ளிவிபரவியல் தொடர்பான தீர்மானங்களையும் எடுக்கிறது.

இச் சபைக்கான உறுப்பினர் தேர்வின் போது மொத்த 53 வாக்குகளில் இந்தியா 46 வாக்குகளை பெற்றது. கொரிய குடியரசு 23 வாக்குகளையும், சீனா 19 வாக்குகளையும் ஐக்கிய அமீரகம் 15 வாக்குகளையும் பெற்றிருந்தன. ஐ.நா. புள்ளிவிவர அதிகாரசபை 1947ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. உலகளாவிய புள்ளிவிவர நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி ஒரு முறைமைக்குள் கொண்டு வரும் தலைமை நிலையமாக இச்சபை செயற்பட்டு வருகிறது.

## சீனாவில் தொடரும் பொருளாதார மந்தநிலை

### புதிய அரசு மாற்று நடவடிக்கைகளை எடுக்கும் என எதிர்பார்ப்பு

கோவிட் பரவுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் சீனா மேற்கொண்ட முழு அடைப்பின் காரணமாக அதன் வீழ்ச்சி கண்ட பொருளாதார வளர்ச்சி, மிக மெதுவாகவே வளர்ச்சி திசையைக் காட்டுவதாகவும் அதன் சேவைத்துறையில் வளர்ச்சி தென்பட்டாலும் உற்பத்தித்துறை இப்போதும் மிக மெதுவாகவே செயற்பட்டு வருவதாகவும் பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொருளாதார மீள் எழுச்சி இயல்பானதாக இல்லை என்பதோடு உற்பத்திகளின் மீதான வெளியுலகின் தேவைகள் போதுமானதாக இல்லை என்று கருத்து தெரிவித்துள்ள டச்சு வங்கியொன்று, இது உள்ளூர் கேள்விகளுக்கும் அச்சுறுத்தலாகவே அமையும் என்று ஆருடம் தெரிவித்துள்ளது. சீனாவின் கடந்த வருட பொருளாதார வளர்ச்சி மூன்று சதவீதமாக அமைந்திருந்தது. இவ்வாண்டில் அது ஐந்து சதவீதமாக இருக்கும் என சீன அரசு நிர்ணயித்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் சீனா கண்ட ஆகக் குறைந்த வளர்ச்சியாக இம்மூன்று சதவீதம் கருதப்படுகிறது.

நாடு வழமை நிலைக்கு திறக்கப்பட்ட பின்னர் உள்நாட்டில் கைத்தொழில் உற்பத்திகள் ஆரம்பமான பின்னர் வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய கேள்விகள் போதுமானதாக இல்லை என்றும, உலகளாவிய பொருளாதார மந்த நிலை இதற்குக் காரணம் என்றும், எனினும் சேவைகள்துறையில் துரித வளர்ச்சியை காண முடிவதாகவும் சந்தை ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.



அக்குறணை தெழும்புகாவத்த பழைய ஜும்மா பள்ளிவாசக்கு அண்மையில் காபட் இடப்பட்ட பாதை நீர் குழாய் பொருத்துவதற்காக பல முறை தோண்டப்பட்டும் மீளமைக்கப்படாததால் சிறுவர் முதல் பெரியவர் பல அசௌகரியங்களுக்கு உள்ளாவதால் பாதையை செப்பனிட்டு தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பட உதவி பசான்



தேசகீர்த்தி மௌலவி மர்ஹூம் எச். சலாஹுதீன் மறைந்த 10 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் மௌலவி எச். சலாஹுதீன் இலங்கை ஒலிரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையில் ஆற்றிய மார்க்கச் சொற்பொழிவுகள் இறை பிரார்த்தனைகள் அடங்கிய இரு வெட்டு வெளியீடும் பாதைக்கு அவரின் பெயர் சூட்டுதல், இப்தார் விசேட நிகழ்வும் கல்ஹின்னை பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. தொழிலதிபர் முஸ்லிம் சலாஹுதீனின் வழிகாட்டலுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எச்.ஏ. ஹலீம், ரவூப் ஹக்கீம், ரிசாட் பதியுதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

## ரமழான் பெருநாள் சந்தை கடைத் தொகுதி பெற்றுக் கொள்ளல்
### புத்தளம் நகர சபை

ரமழான் பெருநாளை முன்னிட்டு புத்தளம் நகர சபையினால் 2023.04.20 மற்றும் 21ஆம் திகதிகளில் ரமழான் சந்தை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கடைத் தொகுதிக்கான முன்பதிவுகள் 2023.04.19ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை புத்தளம் நகர சபையில் நடைபெறும்.

மேலும் இத்தினங்களுக்கு மேலதிகமான நாள் தேவைப்படுமிடத்து புத்தளம் நகர சபையின் தீர்மானத்திற்கு அமைய பணம் செலுத்த வேண்டும் என்பதனையும் அறியத்தருகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு 032 2265275

**எல்.பீ.ஜீ. பிரீதிகா,**
**செயலாளர்,**
**புத்தளம் நகர சபை.**
2023.04.10


**சிறு விளம்பரம்**

**வேலைவாய்ப்பு**

325

**தொழில்துறை**
பொது

கொழும்பு பிரதேசத்தில் வேலை செய்வதற்கு ஆண், பெண் பாதுகாப்பு அலுவலர்கள் தேவை. 0771060667 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 022535

**Repeat Your ad For Better Offers**


## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

